# இதன் விலை -
# ரூபாய் மூவாயிரம்

★
★★

அறிஞர்
சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

★★
★

மறுமலர்ச்சி பதிப்பகம்
26, சப்பாணி பிள்ளையார் கோயில் தெரு,
காஞ்சீபுரம்

முதற்பதிப்பு: ஜனவரி 1953.
இரண்டாம் பதிப்பு: மே 1955.

விலை 0 - 12 - 0

விற்பனை உரிமை:

முரசொலிப் பதிப்பகம்
131, பிராட்வே,
சென்னை-1.

76032

ரதி பதிப்பகம்
127, தெற்கு ஆவணி,
மதுரை.

# அறிமுகம்

திராவிட சமுதாயத்தின் சீரழிவுக்குக் காரணம் பார்ப்பனியம். பிறவியிலேயே உயர்வு தாழ்வு கூறும் கொடுமை இந்தியத் துணைக் கண்டத்துக்கே ஒரு தனிச்சிறப்பு. உலகில் வேறு எங்கும் காணமுடியாத பெரும் புதிர் பார்ப்பனியம்!

பார்ப்பனியம் ஓர் வாழ்க்கை முறை. அந்த ஏற்பாடு உருவாக்கப்பட்ட கால முதல், உருக்குலையாமல், இன்றும் இளமையோடு நாட்டு மக்களின் நெஞ்சிலும், நாவிலும், நடத்தையிலும் நர்த்தனமாடிக் கொண்டு இருக்கிறது.

பொருள் இயல் கோட்பாடுகளும், அவைகளையொட்டி எழுந்த சமுதாய அமைப்புகளும் முதலுக்கும் முடிவிற்கும் உட்பட்டு, வேறு சில புதுப்புது பிறவிகள் எடுத்து உலகில் உலாவுகின்றன. ஆனால் பார்ப்பனியம் மட்டும் காலந் தரும் கிழத்தன்மைக்கு பலியாகாமல் பாரில் பகட்டாக, குகை வாழ்வு முதல் கோட்டையில் குடியேறிய காலம் வரையில் எப்படி வாழ முடிகிறது? இன்றும் பார்ப்பனியத்தின் தன்மை இதுதான்.

இது சிந்தனைக்குரியது. சிந்திக்க அறிவு — ஆற்றல் இரண்டும் தேவை. அறிந்ததை அனைவருக்கும் அறிவிக்க அஞ்சா நெஞ்சம் தேவை.

பார்ப்பனியம் சாகாமல், பிறந்த மேனியோடு இன்றும் சரசமாடிக்கொண்டு இருப்பதற்கு, கடவுள், கர்மம், மோட்சம், நரகம் என்ற கற்பனைச் சொற்களே மூல அரண்களாகும். இந்த அரண்கள் இடித்து நொறுக்கப்பட்டு, மக்கள் மனத்தில் படிந்துள்ள மாசு துடைக்கப்பட்டு, சமத்துவ விதை தூவப்பட்டாலன்றி திராவிடரின் நலிந்த வாழ்வு நீங்குவது முடியாததாகும்.

அந்தக்காலத்தில் பார்ப்பனிய அக்கிரமத்தை அழித்தொழிக்க, உக்கிரமாகக் காலத்திற்கேற்ற முறைகளைக் கையாண்டு, களத்திலே கடும்போர் புரிந்தவர்கள் பழிக்கப்

பட்டனர்; இரக்கமற்ற நெஞ்சினர் என்று ஏசப்பட்டனர்; அரக்கர் என்று தூற்றப்பட்டனர்.

பார்ப்பனிய வாழ்க்கை முறையை உள்ளம் விரும்பி ஏற்றுக் கொண்டு, கட்டிக்காக்கக் கோலெடுத்த கோணல் மதியினரை, நாட்டு மக்களின் நல்வாழ்வு கெட ஏடெழுதிய ஏமாளிகளை, முறையே சனாதனப் பாதுகாவலர், மன்னர், மண்டலாதிபதி என்றும், நாயன்மார், ஆழ்வார், சன்மார்க்க சத்புருஷர் என்றும். புகழ்ந்தனர் எத்தர்கள். இவர்கள் எந்தக்காலத்திலும் பார்ப்பனிய இயந்திரத்தின் விசை முடிக்கிகள்.

நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பை நிர்மூலமாக்க மனிதாபிமானம் கொண்டோரும், பாதிக்கப்பட்டோரும், போரிட படை திரட்டினால், அதனை அடக்கவேண்டும், என்ற நினைப்பும், நெஞ்சத்துடிப்பும் எவருக்கு உண்டாகும்? உழைக்காமல் உல்லாச புரியிலே ஊஞ்சலாடிக்கொண்டிருக்கும் நிலப்பிரபுக்களுக்குத்தானே நெஞ்செரிச்சல் தோன்றும்.

இது போலவே முதலாளித்துவ முறையை மாற்ற முற்போக்காளர்கள் மேற்கொள்ளும் முயற்சியைக் கெடுக்க ஆலை அரசுகள் தானே சல்லடம் கட்டி சண்டைக்குக் கிளம்புவர்?

இந்த நியாயப்படிதான் பார்ப்பனீய முறையை மாற்ற இறந்த காலத்திலும் சரி, எடுத்துக் கொண்ட, எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கெல்லாம் எதிர்ப்பு குறிப்பிட்ட ஒரு வகுப்பினரிடமிருந்தே கிளம்பின—கிளம்புகின்றன.

பார்ப்பனீய ஏற்பாடு குறிப்பாகப் பார்ப்பனர்களுக்கும்—பொதுவாகச் சில பல உயர் ஜாதிக்காரர்களுக்கும் பளபளப்பான வாழ்க்கையை, பாடுபடாமலும், பாடுபட்டாலும் சோர்வு தட்டாதபடியாலும், கொடுத்துக் கொண்டே இருக்கிறது. எனவே, இந்தப் பார்ப்பனீய நச்சரவை நசுக்க, நல்லறிவாளர்கள் நாவசைத்தாலும், நான்கு எழுத்து எழுதினாலும், தங்கள் செவிகளில் நாராசம் காய்ச்சி ஊற்றுவது போல் தெரிகிறது பார்ப்பனத் தோழர்களுக்கு! காலஞ்சென்ற சூரியநாராயண சாஸ்திரி

போல் மேலும் பலர் தோன்றினலன்றி, பார்ப்பனர் மீது காணும் குறைபாடு குறைய வழி பிறக்காது.

அன்று எதிர்ப்புச் செய்தவர்கள் மதியற்ற மண்டலாதிபதிகளால், கழு ஏற்றப்பட்டனர்; கடுந்தண்டனைக்குள்ளாக்கப் பட்டனர். கால மாறுதலால் இன்றைய எதிர்ப்பாளர்களின் பேச்சுக்கும், எழுத்துக்கும் சிறைவாசம், பண நாசம் என்ற தண்டனைகள் தரப்படுகின்றன, அதிகாரத்தின் துணையைக் கொண்டு.

திராவிடப் பெருங்குடி மக்கள், எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் எவ்வளவு சிறந்த திறமைசாலிகளாக இருந்தாலும், அவர்களைப் பாராட்ட—அவர்களைக் குறித்து இரண்டொரு நல்லவார்த்தை கூற பார்ப்பனத் தோழர்கள் முந்துவது அறவே கிடையாது. சுற்றுச் சார்புகளுக்குக் கட்டுப்பட்டு ஓர் திராவிடரின் திறமையை எடுத்துப் பேசவேண்டிய நெருக்கடி ஏற்படும் பொழுதுங்கூட, "அவன் நல்லா நடிக்கத்தாஞ் செய்யிறான்—இருந்தாலும் நம்ம கொத்தமங்கலம் சுப்புகிட்ட அவன் என்ன செய்யிறது?" என்றுதான் பாராட்டுவர். இது திராவிடரின் திறமைக்கு ஒரு பார்ப்பனத் தோழர் மறைமுகமாகத் தரும் வசையாகும். நாட்டு நடப்பை ஆய்ந்து அறிந்தவர்களாலேயே இந்தப் பேருண்மையை எளிதில் புரிந்து கொள்ள முடியும். நிற்க,

'திராவிட நாடு' இதழில் அறிஞர் அண்ணா அவர்கள் இரு கட்டுரைகள் எழுதியிருந்தார்கள். ஓமந்தூர் இராமசாமியாரைக் கவிழ்க்க காங்கிரஸ் பார்ப்பனர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்ததையும் அவர் தப்பிப் பிழைத்ததையும் அடிப்படையாக வைத்துக் கொண்டு, அந்த இரு கட்டுரைகளும் வரையப்பட்டன. 4–4–1948, 18–4–1948 ஆகிய இரண்டு தேதிகளிலும் அக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன. கட்டுரைகள் வெளியான ஓராண்டு ஒரு திங்கள் கழித்து 25–5–1949ல் சென்னை காங்கிரஸ் ஆட்சி ரூபாய் 3000 ஜாமீன் தொகையாகக் கட்டவேண்டுமென்று, 'திராவிடநாடு' ஆசிரியர் அறிஞர் அண்ணாவுக்குக் கட்டளை பிறப்பித்தது. இந்த அநீதி

யைத் துடைக்க அண்ணு அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் காங்கிரஸ் ஆட்சி மீது வழக்குத் தொடுத்தார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் பிரதம நீதிபதி ராஜமன்னர், பஞ்சாபகேச சாஸ்திரி, சந்திரா ரெட்டி ஆகியவர்கள் 4-11-1949-ல் தீர்ப்பளித்துள்ளனர். அறிஞர் அண்ணுதுரை கட்டுரைகளில் குற்றமில்லை என்றும், ரூபாய் 3000 ஜாமீன் தொகையாகச் சென்னை காங்கிரஸ் ஆட்சி கேட்டது முறையல்ல என்றும் தீர்ப்பளித்தனர்.

விசாரணையின்போது, ஆட்சியாளர் சார்பில் வாதித்த அட்வகேட் ஜெனரலை நோக்கி, நீதிபதி பஞ்சாப கேச சாஸ்திர 'அந்த நாள் பார்ப்பனீயத்தை புகுத்தியவர்களைக் கண்டித்தால் இந்தநாள் பார்ப்பனர்களுக்குக் கோபம் வருவானேன்?' என்று ஆணித்தரமாகக் கூட கேட்டுள்ளார். இதற்கு மௌனம் தான் சர்க்கார் வக்கீலின் பதில்.

எந்தக் கட்டுரைகளுக்காக ரூபாய் 3000 ஜாமீன் கட்ட வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சி கேட்டதோ, அந்த இரு கட்டுரைகளையும், 'குற்றமில்லை— ஜாமீன் கேட்டது தவறு' என்று கூறப்பட்ட நீதிபதிகளின் தீர்ப்பின் சுருக்கமும் சிறுநூல் வடிவாகத் தரப்படுகிறது.

கட்டுரைகளில் ஆட்சேபகரமானவை இவை இவை என்று காங்கிரஸ் ஆட்சி சுட்டிக்காட்டி இருந்த பகுதிகளுக்கெல்லாம் நட்சத்திரக் குறியிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஜாமீன் தொகை ரூ. 3000மாக இருக்கவே, அதே தொகையை இச்சிறு நூலுக்குப் பெயராகச் சூட்டப்பட்டுள்ளது.

## இது ஓர் வரலாற்று ஏடு

பார்ப்பனீய வாழ்க்கை முறையைக் கண்டித்ததற்கே, காங்கிரஸ் ஆட்சி 'திராவிடநாடு' இதழுக்கு ரூபாய் 3000

ஜாமீன் கேட்டிருக்கிறது. பார்ப்பனர்களை நேரடியாக பல காலமாகவே பலபுலவர்கள் கண்டித்து வந்திருக்கிறார்கள்.

பார்ப்பனர்கள் யாகம் செய்கிறார்கள். அதில் கடவுள் பெயரால் பசு சித்திரவதை செய்து கொல்லப்படுகிறது. இது கண்டு, பார்ப்பனர்களாலேயே வளர்க்கப்பட்டதாகக் கூறப் படும் ஆபுத்திரன், பார்ப்பனர்களைப் பார்த்து,

**'நோவன செய்யன்மின்'**

எனக் கடிந்துரைக்கிறான். இது மணிமேகலை.

**பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்**
**போர்கொண்ட வேந்தர்க்கும் பொல்லாத வியாதியாம்**
**பார்கொண்ட வேந்தர்க்கும் பஞ்சமுமா மென்றே**
**சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.**

இவ்வாறு கூறினவர் திருமூலர். திருமந்திரத்தில் உள்ளது இது.

**'பாப்போடு பழகேல்'**

இது பிற்காலத்து ஔவையின் வாக்கு. இதுபற்றி விளக்கம் தந்திருப்பவர் காலஞ் சென்ற கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

**"பாப்புப் பெருத்தல்லவோ சோழ மண்டலம் பாழ்த்ததுவே"**

இப்படி ஒரு புலவன், பார்ப்பனர்களின் செயல் கண்டு மனம் நொந்து, வாய்விட்டு, அலறி இருக்கின்றான்.

கம்பனே ஆரியதாசன். அவன்கூட பார்ப்பனர் வாழ்க்கை முறை கண்டு வருந்தியுள்ளான்.

**'முட்டிப்புகும் பார்ப்பாரகத்தை எட்டிப் பாராமோ'**
என்று ஏளனக் குரல் எழுப்பி உள்ளான் கம்பன்.

ஜாதி முறையின் கேடுகளைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் கபிலர் கதறி இருக்கிறார். அகவற்பாவாக அவர் சுட்டிக்காட்

டுகிறார். திட்டவட்டமாக சிறிதும் ஒளிவு மறைவு இல்லாமல், ஜாதி முறையைப் புகுத்திய நல்லவர்களை.

"பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்
நால்வகை சாதியை நாட்டினில் நாட்டினீர் நீர்"

காலஞ் சென்ற கவிபாரதியார் ஒரு பார்ப்பனர். வாழ் நாட்களில் எப்படி எப்படியோ வாழ்ந்தார். அவரும் பார்ப் பனர் எத்தகையப் போக்கினர் என்பதை வெட்ட வெளிச்ச மாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

"பேராசை கொண்டவனடா பார்ப்பான். அவன்
பெரிய துரை எனில் உடல் வேர்ப்பான்"

'ஆசை—அச்சம்' இந்த இரு பண்புகளிலும் பார்ப்பனர் உச்சத்தில் இருப்பவர்கள் என்று பாரதியார் சொல்லி இருக் கிறார்.

பார்ப்பனரின் பண்புகளை எடுத்துக்கூறும் இந்தப் பாட்டு களையும், கூறிய புலவர்களையும் என்ன செய்வது? புலவர்கள் தான் மறைந்து விட்டார்கள் என்றாலும், ஏடுகள் இன்னமும் நாட்டு மக்களிடை நடமாடிக்கொண்டுதானே இருக்கின்றன?

"பார்ப்பனர் வீட்டுப் பசுமாடு போல" என்று எடுத்துக் கூறி, பார்ப்பனர்களின் கல் நெஞ்சை படம் பிடித்துக் காட்டு கிறார் நாடாளும் முக்கியஸ்தர் ஒருவர். அவர் பழங்குடி மக் களைச் சேர்ந்தவரும் அல்ல பரங்கித் துரையும் அல்ல, ஒரு முதல் தரமான பார்ப்பனர், பார்ப்பன இனத்தின் பாதுகாவலர், கண்ணன் காட்டிய வழியில் விழி வைத்து வாழ்க்கையை நடத் திச் செல்லுபவர். இம்மாகாண முதலமைச்சராக உள்ள சக்ர வர்த்தி இராஜகோபாலாச்சாரியாரே, மேல்குறித்துள்ளபடி பார்ப்பனரைக் குறித்துக் குறை கூறியுள்ளார். பாம்பின் கால் பாம்பிற்குத் தானே தெரியும்? தன் இனத்தின் அருமை பெரு மைகள் தனக்குத் தெரியாமல் இருக்க முடியுமா?

சில திங்களுக்கு முன் சென்னை பச்சையப்பன் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் பேச வந்த ஆச்சாரியார், அந்த நேரத்தில் தனக்குள்ள நிலையை விளக்க மேற்குறித்துள்ள உவமையைக் கூறினார். அதற்கு நல்லதோர் விளக்கமும் தந்தார். அதாவது, வேளாண் மக்கள் தங்களுக்கு வேண்டிய பாலை மட்டும் கறந்து கொண்டு, மிச்சத்தைக் கன்றுக்குட்டிக்கு விட்டுவிடுவார்கள். கோமுட்டி மக்கள் பசுவின் இரண்டு காம்புகளை கன்றுக்குட்டிக்கே ஒதுக்கி விடுவார்கள். ஆனால் பார்ப்பனர்களோ கன்றுக்குட்டிக்கு ஒரு சொட்டும் விடாமல் பசுவை ஒட்டக் கறந்துவிடுவார்கள்—என்று பார்ப்பன மக்களின் உள்ளக்கிடக்கையை ஐயத்திற்கிடமில்லாமல் எடுத்துக் கூறியுள்ளார் ஆச்சாரியார்.

பார்ப்பார் வீட்டுப் பசுங்கன்று ஒன்று மற்றொரு கன்றைப் பார்த்து. 'பால் சாப்பிட்டிருக்கிறாயா; அது எப்படி இருக்கும்?' என்று கேட்குமாம்!

பார்ப்பனரின் இரக்கத் தன்மைக்கு ஆச்சாரியாரைக் க்காட்டிலும், இந்த முறையில் வேறு எவராலும் நற்சாட்சிப் பத்திரம் தரமுடியாது. ஆச்சாரியார் கூறிய இதே வாசகத்தை வேறு எந்தத் திராவிடராவது கூறி இருந்தால், இதற்குள் நில நடுக்கமே ஏற்பட்டு இருந்தாலும் ஏற்பட்டு இருக்கக்கூடும்!

சுவாமி விவேகாநந்தர் பார்ப்பனர்களைக் கண்டித்துப்பேசி இருப்பதைப்போல் இதுவரையில், நமது கட்சித் தோழர்களில் எவரும் பேசினது கிடையாது.

இப்படி ஒரு சமூகம் ஏன் ஒவ்வொரு காலத்திலும் நேரடியாகப் பழிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நல்ல முறையில் இப்போக்கினை மாற்றிக்கொள்ள, மாற்றி அமைக்கப் பார்ப்பன இளைஞர்கள் முன் வரவேண்டும்; அத்தகுநிலை இப்பொழுதே ஏற்பட்டு இருக்கிறது. தினம் தினம் வளர்ந்துகொண்டும் வருகிறது. மேலும் மேலும் வளர வேண்டும். அப்பொழுதுதான் பார்ப்பனீய வாழ்க்கை முறை தொலைந்து நாட்டில் ஜனநாயக வாழ்க்கை ஏற்பாடு மலர வழி பிறக்கும்,

அறிஞர் அண்ணாவின் இச்சிறு நூல், திராவிடர்களிடை புது மலர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற நன் நோக்கத்தோடு வெளியிடப்படுகிறது. அன்பர்கள் ஆதரிப்பார்களாக.

இச்சிறு நூலை வெளியிடும் உரிமையை மனமுவந்து எனக்களித்த அண்ணா அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

வழக்கை திறமையாக வாதித்து வெற்றியைத் தேடித்தந்த பெருமைக்குரிய இரு வழக்கறிஞர்களான எப். ஜி. ஜகனாதன், துரைராஜ் ஆகிய இருவர்களையும் திராவிடர் என்றும் மறவார்.

வணக்கம் !!

அன்பன்

**காஞ்சி. கல்யாணசுந்தரன்**

# சென்னை சர்க்கார்

## பப்ளிக் (ஜெனரல்-எ) இலாகா

**1931-வது ஆண்டு இந்திய பத்திரிகை (அவசரச்) சட்டத்தின் 7-வது பிரிவைச் சேர்ந்த (3)-வது உட் பிரிவின் படிக்கான நோட்டீஸ்.**

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த காஞ்சிபுரத்திலிருந்து வெளிவரும் "திராவிட நாடு" என்ற பத்திரிகையின் 1948-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4, 18-ந்தேதிய இதழ்களில் 1931-ம் ஆண்டு இந்திய பத்திரிகை அவசரச் சட்டத்தின் (1931-ம் வருடத்திய 23-வது மத்திய சட்டம்) நிபந்தனைகளின் படிக்கு பத்திரிகை ஜாமீன் கோரப்பெற்றிராதவை—மேற்படி சட்டத்தின் 4 (1) (யெச்) பிரிவின் கீழ் விவரிக்கப்படும் தன்மை வாய்ந்த விஷயங்கள் அடங்கியிருந்ததாக சென்னை சர்க்கார் கருதுவதால்,

மேற்படி சட்டத்தின் 7 (3)-வது பிரிவு தரும் அதிகாரத்தைக் கொண்டு மேற்படி பத்திரிகையின் வெளியீட்டாளராகிய ஸ்ரீ. சி. என். அண்ணுதுரை செங்கற்பட்டு மாவட்ட நீதிபதியிடம் 1949-வது ஆண்டு ஜூன் 25-ந்தேதி அன்ருே அதற்கு முன் போ ரூ. 3,000 தொகையாகவோ அல்லது அதற்கு சமமான மத்திய சர்க்கார் பத்திரங்களாகவோ ஜாமீன் கட்டியாக வேண்டுமென்று மேன்மை தங்கிய கவர்னர் இதன் மூலம் உத்தரவிடுகிருர்,

(மே. த. கவர்னர் உத்தரவுப்படி)

**(சீ. கே. விஜயராகவன்.)**

**சர்க்கார் பிரதம காரியதரிசி.**

## ஒரு துளி !

"எவ்வளவு இன்சொல்லால், அன்பையும், சத்தியத்தையும் உத்தமர் காந்தியார் போதித்தார்! கோட்சே இதற்கே அவரை கொல்லத் துணிந்தான் அல்லவா! உத்தமர் உண்மைக்காக உயிரைத் தந்தபோது, நாம் சாதாரண புகழை, பதவியை, இழந்தால்தான் என்ன! நஷ்டமல்ல நாட்டுக்கு ...... விமோசனம் கிடைக்கும்."

அறிஞர் அண்ணா

# காந்தி ராமசாமியும் பெரியார் ராமசாமியும்

ஓமந்தூரார் வெற்றி பெற்ருர்:—உண்மை வெற்றி பெற்றது—உறுதிக்கும் ஒழுக்கத்துக்கும் வெற்றி கிடைத்தது—சூதுக்கும் சூழ்ச்சிக்கும் இடமளிக்க மறுத்து விட்டனர்–ஆட்சி பீடத்தைத் தமதாக்கிக்கொண்டு இலாப வேட்டையில் ஈடுபடத் திட்டமிட்டவர்களின் ஆசையில் மண் வீழ்ந்தது—மக்களாட்சியின் மாண்பினை உணர்ந்து நடக்கும் உத்தமர்களின் பக்கம் வெற்றி நின்றது.

கள்ளங்கபடமற்ற கிராமவாசி........................அரசியல் சூதாட்டத்துக்கு அப்பாற்பட்டவர்—தியாக முத்திரையை அரசியல் சந்தையிலே விற்கத் துணியும் வியாபாரியாக இருக்க மறுப்பவர்—சொந்த வாழ்க்கையையும், சுகத்தையும் மிகமிகக் குறைந்த அளவினதாக்கிக்கொண்ட, துறவு மனப்போக்கினர், ஏடுகளுக்குப் பின்புறம் இருந்துகொண்டு நாட்டு நிலையைக் கவனிக்க மறுக்கும் போக்கினராக இல்லாமல், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு, நம்மாலான பணியுரியும் சந்தர்ப்பம் நமக்குத் தரப்பட்டுள்ள நேரத்தில் நாம் நலம் செய்வதுதான் 'தர்மம்' என்ற நோக்கமுடையவர், ஏர் என்ருல் என்ன என்று கேட்கும் மேனுமினுக்கி வாழ்வினர் போலன்றி, நெடுங்காலமாகக் கிராமங்களின் வாழ்வை நேரடியாக, அவர்களுடன் பழகி மட்டுமல்ல, அவர்களில் ஒருவராகவே இருந்து அறிந்துகொண்டவர். வெள்ளை ஆட்சி போகவேண்டியதற்கான காரணம், சொந்த ஆட்சி தேவை என்ற ஆவேச இலட்சியம் மட்டுமல்ல, நல்ல ஆட்சி தேவை என்ற அடிப்படை நியாயமே என்று நன்னெறியை உணர்ந்தவர். உள்ளொன்று வெளியொன்று கொண்டுழலும் உலுத்தர் போலன்றி, ஊருக்குழைப்பேன், அதனுல் வந்துறும் இன்னலைப் பொறுப்பேன், என்ற உறுதி படைத்த உள்ளத்தினர், எளிய வாழ்க்கையும், சீரிய

குணங்களும் கொண்டவர். இவரே நமது முதலமைச்சர் என்று சொன்னலொழிய, யாராலும், அவ்வளவு பெரிய பதவியில் அமர்ந்திருப்பவர் என்று கண்டதும் உணரக்கூடிய விதமான உருவமோ, உடையோ, நடையோ கொண்டவரல்ல. தன்னடக்கமுள்ள தமிழர், ஓமந்தூரார்.

தென் ஆற்காடு மாவட்டத்திலே, மிகச்சிறிய கிராமம், ஓமந்தூர். கிராமத்தைத் தொட்டும் தொடாமலும் இருக்கும் சிறியதோர் வயல் சூழ்ந்த தோட்டம். பயன் தரும் மரவகைகள், பச்சைப் பயிர் வகை. பழம் தரும் செடிகள், படரும் கொடிகள், இவைகளுக்கிடையே ஓர் வீடு—அதிலே பன்னெடுங்காலம் தங்கி, சந்தடி, ஆர்ப்பாட்டம், இவைகளைக் கேட்கவும் காணவும் அவசியமில்லாத இடத்தில் வாழ்ந்து, தூய்மையையும், வாய்மையும் உள்ளத்தில் பயிரிட்டுக்கொண்டிருந்தவர், ஓமந்தூரார். அவருக்கு ஆறு குமாரர்கள், அவர்களுக்கு இன்னின்ன வேலை தேடிக்கொடுத்தார், மருமகனை மைசூர் சமஸ்தானத்திலே பெரிய வேலையில் அமர்த்தினார். மைத்துனனுக்கு மைக்கா சுரங்க உரிமையைத் தந்தார். சம்பந்தி வீட்டாருக்குச் சர்க்கார் காரியாலயத்திலே வேலை தேடிக்கொடுத்தார் என்று வததிகள் கூறுவதற்குரிய நிலையும் நடவடிக்கையுமே சர்வசாதாரணமாக நாடாளும் வாய்ப்புப் பெற்றவர்களிலே பெரும்பாலோருக்கு இருக்கும். ஓமந்தூரார், இத்தகைய சூழ்நிலையில் சிக்கினவருமல்ல, முரட்டுச் சுபாவம். வாக்குத் தருவதில் வல்லுனர். நோக்கத்தை மறைப்பதில் நிபுணர் என்றெல்லாம் பழித்துப் பேசப்படுபவர். பல அரசியல் தலைவர்கள்—ஆனல், பகைவனும் இவர்மீது இப்படிப் பழி சுமத்த முடியாது. காங்கிரஸ் தியாகத்தீயிலே விழமறுத்துவிட்டு, வெள்ளை ஆட்சியின் போது, சுயநல வேட்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்துவிட்டு, சமயம் கிடைத்த உடனே. பதவிக்காகப் பல்லிளித்த பலர் போலின்றி, காங்கிரசின் தொண்டராக இருந்து, தியாகத் தீயிலேயே குளித்து வெளிவந்தவர். அவர் அமெரிக்கா சென்றதில்லை, ஆங்கில நூல் நிலையங்களில் ஆண்டுகளை செலவிட்டதில்லை, அதிகாரிகளுடன் நிலாச்சோறு உண்டுகொண்டிருந்ததில்லை, கட்டை வெட்டும் கந்தன், மாடோட்டும் முனியன்,

தோட்டக்கார துரைசாமி, வயலில் வேலை செய்யும் வரதன், இப்படிப்பட்ட, பாடுபடும் மக்களோடு பெரிதும் பழகியவர்.

இப்படிப்பட்ட ஓமந்தூராருக்குத்தான், போட்டி ஏற்பட்டது—இவருடைய பீடத்தைக் கவிழ்க்கத்தான் புயல் வீசிற்று—இவரை ஒழித்துக்கட்டத்தான் முஸ்தீபுகள் பலமாக நடைபெற்றன! இவர் வெற்றிபெற்றார் — 112 ஓட்டுகள் பெற்றார்—படை திரட்டிய பிரகாசம் தோற்றார். எண்பத்தி நாலே ஓட்டுகள் பெற்றார்—களிப்படைகிறோம். பெருமைப் படுகிறோம், பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம் என்று, அவருடைய நண்பர்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களில் பெரும் பாலோர் கூறி மகிழ்வதைக் காண்கிறோம்—ஆனால் நமக்கோ, இந்த வெற்றி, களிப்பைத் தருவதைவிட பயத்தை ஊட்டுவதாகவே இருக்கிறது. ஏன்? ஓமந்தூராருக்கு வெற்றிதான், என்ற களிப்பிலே ஈடுபட்டு, உண்மையை மறந்துவிட மறுக்கிறோம். உண்மை என்ன? அப்படிப்பட்ட நல்லவருக்கு 'எதிர்ப்பு' ஏற்பட்டு, அவ்வளவு தன்னலமற்றவரைத் தாக்கச் சதி நடைபெற்றதே, அதனை எண்ணும்போது எவ்வளவு 'பொல்லாதவர்கள்' நாட்டிலே நடமாடிக்கொண்டுள்ளனர், என்பதல்லவா தெரிகிறது—அது நமக்குத் திகிலையும் கவலையையுமே உள்ளபடி தருகிறது.

யாரை, சகல கட்சியினரும், நல்லவர், தன்னலமற்றவர், என்று புகழ்கிறார்களோ, யாருடைய முன்னாள் நடவடிக்கையும் இந்நாள் போக்கும், துளியும் சுயநலமற்றதாக இருக்கிறதோ அவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டதென்றால், அந்த எதிர்ப்பை அவர் தோற்கடித்ததிலே ஏற்படும் மகிழ்ச்சியைவிட, எதிர்ப்பு ஏற்பட முடிந்ததே அந்த நிலையையே கவனிக்கவும், கவலை கொள்ளவும் தோன்றுகிறது. மந்திரி சபையைக் கவிழ்க்கச் சதி செய்தவர்களெல்லாம், மண் கவ்வினர், என்று மகிழட்டும், நமக்கோ, மாண்புடையவர் என்று மக்களால் மதிக்கப்படுபவருக்கு எதிரிடையாகச் சதி நடந்ததேஅதுவே துக்கத்துக்கும் வெட்கத்துக்கும் உரியதாகத் தோன்றுகிறது.

கெட்ட வாடை அடிக்கிறது என்றனர், கேடு கெட்ட புத்தியினர்—நாசியுள்ளோர் முகர்ந்து பார்த்துக் கூறட்டும், மல்லிகை மணமுள்ள மலர் தானு, அல்லவா என்பதனை என்று எவரேனும் கூறி, ஒருவர் மல்லிகையை முகர்ந்து பார்த்து, செச்சே ! யாரப்பா, வீண் பழி சுமத்தினவன்? மல்லிகை மணமாகத்தான் இருக்கிறது, என்று கூறினுல், மகிழ்ச்சிக்குரிய சம்பவமாக, நாம் அதனைக் கூறமாட்டோம்—மல்லிகையின் மணத்தைச் சந்தேகிக்கும் அளவு மந்த மதியிருப்பதையும், அதனைச் சாதகமாக்கிக் கொண்டு, மல்லிகையைப் பழிக்குமளவு, சூது செய்யும் வஞ்சகர்கள் இருப்பதையும், எண்ணியே ஏங்குவோம். அது போலத்தான், ஓமந்தூரார் பெற்ற வெற்றி, நமக்கு, மகிழ்ச்சி பெறுவதற்குச் சந்தர்ப்பமாகப் படுவதை விட அதிக அளவுக்கு இந்த நாட்டிலே மிக மிக நல்லவர்களுக்கு எதிராகச் சதி செய்யும் பொல்லாதவர்கள் இருக்கிருர்களே, என்பதைத் தெரிந்து கொள்ளவும், அதஞல் உள்ளம் துடி துடிக்கவுமான, சம்பவமாகத் தோன்றுகிறது.

போட்டி—தேர்தல்—இவை சகஜந்தானே ! ஜனநாயக இலட்சணமே போட்டிதானே, இது கண்டு நீ ஏன் வீணுகப் பதறுகிருய், ஏதேதோ கூறிக் கதறுகிருய், என்று கேட்பர் சிலர்.

குடி அரசுக் கோட்பாட்டின்படி, ஒரு அரசியல் கட்சிக்கும் மற்ருேர் அரசியல் கட்சிக்கும் போட்டி ஏற்படுவது முறைதான்—அது தேவையுங்கூட. ஆனுல் ஓமந்தூராருக்குப் போட்டி சொந்தக் கட்சியிலே முளைத்தது !!

இதுவும் சாதாரண சம்பவம்தான் என்பார் உண்டு. சொந்த இயல்பு சோடையாக இருக்கும் ஒருவருக்கு சொந்தக் கட்சியிலே, போட்டி ஏற்பட்டால், அது சாதாரண சம்பவமாக மட்டுமல்ல, காரணத்தோடு கூடிய சம்பவமாகக் கூடக் கருதலாம். ஆனுல் ஓமந்தூராரை மாசிலாமணி என்று கூறினர்—விழியில் பழுதுள்ளவருங்கூட அவரிடம் வஞ்சனையோ சுயநலமோ இருப்பதாகக் குற்றம் சாட்ட வில்லை-அப்படிப்பட்ட அவருக்கு

எப்படிப் போட்டி ஏற்படலாம்? அந்தப் போட்டியை, எப்படி சர்வ சாதாரணச் சம்பவம் என்று கூறி விட முடியும்?

அவர் நல்லவராக இருக்கலாம், சுயநலமற்றவராக இருக்கலாம். அவருடைய கொள்கைகளும் திட்டங்களும், அவருக்குச் சரியானவை என்று அவர் மனதுக்குப்பட்டிருக்கக் கூடும். ஆனால் அதனாலேயே, வேறு திட்டங்களைக் கொண்டவர்களுக்கு இடமளிக்கக் கூடாது என்று பொருளோ என்று வாதாடி, ஓமந்தூரார் இன்ன திட்டத்தைப் புகுத்துகிறார், அது சரியில்லை, இதோ எமது திட்டம், இதுவே நாட்டுக்கு ஏற்றது, காலத்திற்கு உகந்தது, கவைக்கு உதவக் கூடியது, என்று மாற்றுத் திட்டத்தைக் கூறி, இந்தப் போட்டி நடத்தப்பட்டதா, என்றால் இல்லை. ஓமந்தூரார் தலைவராக இருப்பதா? பிரகாசம் அந்த பீடத்தில் இருப்பதா? என்பது தான் போட்டியிலே பிரச்னையாக இருந்ததேயொழிய, ஓமந்தூரார் திட்டத்துக்கும் பிரகாசம் திட்டத்துக்கும் போட்டி என்ற முறையிலே பிரச்னை இல்லை.

இங்கு தான், சூட்சமும் இருக்கிறது—வெற்றிக் களிப்பிலே பலர் இதனை மறந்திருப்பர்,—வேதனையை ஏன் கிளறுவது என்பதற்காக பலர் மறைத்திருப்பர்—உள்ளம் வெளியே தெரிந்து விடப் போகிறது என்பதற்காக சிலர், இதனை மறுத்தும் உரைப்பர்—ஆனால் ஆர அமர யோசிக்கும் எந்த நேர்மையாளரும் இந்தச் சூட்சமத்தைத் துச்சமெனக் கருதி விட மாட்டார், என்பது திண்ணம்.

நாடாளும் கட்சியிலே நல்லவர் என்று நாட்டு மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு தலைவருக்கு, காரணமின்றி—வெளியே பகிரங்கமாக காரணம் ஏதும் கூறப்படாத நிலையில்—போட்டி ஏற்பட்டிருக்கிறது. அவருடைய குணம் சந்தேகிக்க படவில்லை, அவருடைய திட்டம் தாக்கப் படவில்லை, மாற்றுத் திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை, என்றாலும், அவருக்குப் போட்டி–போட்டியா அது—பூசல்!—பூசலும் சாதாரண

மாகவா, ஏசல் பாணங்களைச் சரமாரியாக ஏவின நிலையில் பூசல்—சதியே கூட—நடை பெற்றிருக்கிறது. ஏன் ? இரு தரப்பினரும், கூசுகின்றனர், கூற. ஆனால் இரு தரப்பினரின் மனமும் குமுறுகிறது! இவ்வளவு வேதனைக்கிடையிலேயும் இந்த வேடிக்கை தெளிவாகவே புலனாகிறது.

"ஏனய்யா ஓமந்தூரார் கூடாது என்று கூறுகிறீர் ?"

,,அவர்—அவர்......" இப்படி இழுக்கிறார் எதிர்ப்பாளார்.

"என்ன தான் காரணம் இந்த எதிர்ப்புக்கு ?" என்று விடாப் பிடியாகக் கேட்டால் தடு மாற்றத்துடனே தான் பேசுகிறார் எதிர்ப்பாளர், "அவர்—அவர் நல்லவர்—தங்கமானவர்—நாணயஸ்தர்-அவர் மீது ஒரு குறையும் இல்லை..........ஆனால்......" என்று எதையோ மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், அவஸ்தைப் படுகிறார்.

அவருக்கு ஆங்கிலம் தெரியாது, என்று ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளாத நிலையிலே உள்ளவர்கள் கூடக் கூறினர்—அது ஒரு காரணமாகாது,

இது போன்ற அர்த்தமற்ற எதையோ கூறினரேயொழிய, உண்மையைக் கூற, அவர்களுக்கு நெஞ்சு உரம் இல்லை! ஏன் ? உண்மையைக் கூறினால் ஊராரின் கண்கள் திறந்து விடும். அப்போது உலுத்தரின் சூது நன்றாகத் தெரிந்து விடும் என்ற அச்சம் எதிர்ப்பாளர்களைப் பிடித்துக் கொண்டது.

ஆச்சாரியாருக்கு முன்பு எதிர்ப்பு ஏற்பட்டது-அவர் ஆகஸ்ட்டுத் துரோகி—ஆணவச்சுபாவக்காரர்—என்று காரணங்கள், பொது மேடைகளிலேயே எடுத்துக் கூறப்பட்டன, காமராஜ் போன்றவர்களால்.

ஆந்திர கேசரி பிரகாசம் அவர்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. அவர், விஞ்ஞானத் தொழில் முறையை ஒழித்து விடும் நோக்குடன், மில் ஒழிப்புத் திட்டம் கொண்டு வருகிறார் என்று காரணம், கூறப்பட்டது.

அதுபோல, ஓமந்தூராருக்கு ஏற்பட்ட போட்டியின் போது, என்ன காரணம் கூறப்பட்டது? வெற்றிக் களிப்பு அடைந்தவர்கள், தோல்வியால் துவண்டவர்கள், ஆகிய இரு தரப்பினருமே, இந்தக் காரணத்தை நாட்டு மக்களுக்குக் கூறவில்லை. இந்தப் போட்டி, மக்கள் பொதுமன்றத்திலே நடைபெற்றிருந்தால், ஓரளவுக்காவது, இந்தக்காரணம் என்ன என்பதை மக்கள் தெரிந்து கொண்டிருக்க முடியும். போட்டியோ, தாளிட்ட கதவுக்குப் பின்புறம், மண்டபத்துக்குள்ளே இரு படை வரிசை மட்டுமே தங்கியிருந்த முகாமில், நடைபெற்றது. முடிவு மட்டுமே மக்களுக்கு அறிவிக்கப்பட்டது— உள்ளே நடைபெற்ற "விவாதம்" மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஏன்? தெரிவித்திருந்தால், பிரச்னை, வேறு உருவாகிவிட்டிருக்கும். போட்டி, ஓமந்தூராருக்கும் பிரகாசம்காருவுக்குமிடையே அல்ல—இருவரும், இருவிதமான 'சக்திகளின்' பிரதிநிதிகளாக இருந்து, போர் நடைபெற்றது என்ற சூட்சமம், வெட்ட வெளிச்சமாகி விட்டிருக்கும். சூட்சமத்தை, மிகமிகச் சாமர்த்தியமாகவே மறைத்துப் பார்த்தனர். ஆனால் அதிலே முழுவெற்றி கிடைக்கவில்லை. சூட்சமத்தை மக்கள் சற்றுப் புரிந்து கொண்டனர், காரணம் ஏதும் காட்டப்படாமல் நடத்தப்படும் இக்கடும் போருக்கு, உள்ளூர ஓர் காரணம் உண்டு என்பதை யூகித்தறிந்து கொண்டனர். அறிந்ததும், ஓர் முழக்கம் கிளம்பிற்று, மண்டபத்தருகே! அந்த முழக்கம், அமைச்சர் டாக்டர் சுப்பராயனின் உள்ளத்தை உருக்கி விட்டதாம்—காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோலிருந்ததாம் அந்தக்கூச்சல்! கூச்சல் —மந்திரியார் கூறுகிறார் அதுபோல், மக்கள் கூறுகின்றனர், முழக்கம் என்று. வருமுன் உரைப்போர் கூறுகின்றனர், எச்சரிக்கை என்று. பெயர் எப்படியோ கிடக்கட்டும், இந்தப் போட்டியின் முடிவு தெரிந்ததும் மக்கள் பிராமணர் ஒழிக என்று கூச்சலிட்டனர்—என்பது, ஒப்புக் கொள்ளப்படுகிறது. இந்தக்கூச்சலிட்டவர்கள், காங்கிரஸ் காரர்களேதான் என்பதையும் டாக்டர் தெரிவிக்கிறார்.

* காங்கிரஸ் கட்சியிலே தலைவர் தேர்தல் நடைபெறுகிறது. வெளிப்படையாக, உருவான ஒரு காரணமும் கூறப்படவில்லை.

போட்டி நடைபெறுகிறது. ஓமந்தூரார் ஜெயம் பெறுகிருர். ஆந்திரநாட்டுப் பிராமணர் பிரகாசம் தோல்வி அடைகிருர். இந்த முடிவு தெரிந்ததும் மக்கள், பிராமணர் ஒழிக என்று கூவுகிருர் கள் என்ருல். சூட்சமம் தெரியவில்லையா! நாலும் நாலும் எட்டு. எட்டுடன் இரண்டு சேர்த்தால் பத்து என்பது போல மிகமிகச் சாமான்யமானவர்களுக்கும், புரிந்து விடுகிறதே சூட்சமம்,— மிகமிகச் சாமர்த்தியமாக மறைத்து வைக்கப்பட்ட சூட்சமம்.

* உள்ளே நடைபெற்ற போட்டிக்கு பிராமணர் காரணம் என்று, வெளியே கூடி இருந்த மக்கள் எண்ணுகிருர்கள். ஓமந் தூரார் ஜெயித்ததும், பிராமணர்களின் திட்டம் தோற்று விட்டது என்று தீர்மானிக்கிருர்கள், போட்டியில் கலந்து கொள்ளும் உரிமை கிடைக்காததால் தங்கள் உள்ளத்தில் உள்ளதை மற்றவருக்கு அறிவிக்க, என்ன வழி என்று யோசிக் கிருர்கள். ஓர் யோசனை உதிக்கிறது. பிராமணர் ஒழிக! என்று கூச்சலிடுகிருர்கள். இதுதானே விஷயம்!!

இனி இதனுல் வேதனை என்ன? வெற்றிதான் ஓமந்தூராருக் குக் கிடைத்துவிட்டதே, என்று கேட்கத் தோன்றும்.

* கெட்ட நடவடிக்கை கொண்ட ஒருவரை நீக்கவோ திட்டம் ஒன்றைத் தாக்கவோ, 'போட்டி' நடைபெறவில்லை, பார்ப்பனர் அல்லாதார் பிரச்னை மீதே போட்டி நடைபெற்றது, அதுவும், பார்ப்பனர்—அல்லாதார் என்ற பிரச்னையைப் பிரசாரக் கொள்கையாகக் கொள்ளாமலும், அந்தப் பிரச்னை காரணமாக வரைமுறை தவறி நடக்கிருர் என்று குற்றம் சாட்டப்படக் கூடிய நிலையிலே, இல்லாதவரும், மிக நல்லவரும், பழுத்த காங்கிரஸ் வாதியுமாகிய ஓமந்தூராருக்கே, அவர் பிராமணர் அல்லர்; அவருடைய ஆட்சியின் கீழ் பிராமணரின் ஆதிக்கத் துக்கு வழிவகை செய்யப்படும் என்று நம்பிக்கையோடு இருக்க இடமில்லை, என்ற அளவு சந்தேகம் ஏற்பட்ட உடனே, நல்ல வராளுல் என்ன? காங்கிரஸ்காரராளுல் என்ன? நம்மவர்க்கு அவர் இருப்பதால் இலாபம் இல்லை, என்று தெரிந்த பிறகு, அவர் ஆட்சி செய்ய, ஏன் நாம் அனுமதிக்க வேண்டும்? இதோ

கிளம்பி அவரை ஒழித்து விட்டு, வேறு ஒருவரை பீடத்தில் அமர்த்துவோம், என்று துணிந்து கூறவும், அதன்படியே, காரியம் ஆற்றவும், ஒரு கூட்டத்தினருக்கு எண்ணமும் துணிவும், வழியும் வசதியும், வல்லமையும் இருக்கிறது என்றால், நாட்டிலே, எப்படிப்பட்ட சூழ்நிலை இப்போதும் இருக்கிறது என்பது விளங்கவில்லையா ? அது விளங்கும் போது, வேதனை ஏற்படவில்லையா !

* பனகல்—பொப்பிலி— இவர்கள், தேசத் துரோகிகள், காங்கிரசின் விரோதிகள், ஆகவேதான். அவர்களை ஒழித்தோம்—என்றனர்.

* ஓமந்தூரார்மீது படை எடுக்க, என்ன காரணம்? ஓராண்டுக்கு முன்பு அவரை ஏத்தி ஏத்தித் தொழுதவர்கள், இப்போது அவரிடம் என்ன குறையைக் கண்டுவிட்டனர்? ஏன் அவர்மீது போரிட்டனர்? சூட்சமம், மக்களுக்குப் புரிகிறது— புரியவேதான், குமாரமங்களக் குணாளர் மனம் புண்ணானாலும் சரி என்று துணிந்து, அன்று கூவினர், என்று கருதவேண்டியிருக்கிறது. எந்தக் கட்சியினராக இருந்தாலும் சரி, எவ்வளவு நல்லவராக இருந்தாலும் சரி, நமக்குப் பயன்படவில்லை, நமது ஆதிக்கத்தை வளர்க்கும் காரியத்திலே அக்கரை காட்டவில்லை என்றால், அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, வேறு ஒருவரை, நமக்குப் பயன்படக்கூடிய ஒருவரை, பீடத்தில் ஏற்றவேண்டும். அதற்காக, கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஜனங்களின் காதுக்கு இனிக்கக்கூடிய ஏதாவதோர் காரணத்தைக் காட்டி எதிர்ப்பைக் கிளப்ப வேண்டும். பகிரங்கமாகவோ, மறைமுகமாகவோ, எப்படியோ வேலை செய்து வெற்றி காண வேண்டும், என்று எண்ணும் ஓர் கூட்டம் நாட்டிலே இருக்கிறது என்ற உண்மையைக் காணும்போது, வேதனையும் திகிலும் ஏற்படாமலிருக்க முடியுமா? நமக்குப் பயன்படவில்லையானால், மலரையும் சருகு என்று மார்தட்டிக் கூறும் மகானுபாவர்கள், மறத்தமிழர் நாட்டிலே அறிவு அரசு செய்யும் நாட்களிலேயும் ஆதிக்கத்தில் இருப்பது அறியும்போது, உள்ளம் வேதனைப்படாதிருக்குமா?

தடை உத்தரவு பிறப்பித்தார். ஸ்ட்ரைக்குகளை உடைத்தார். சிறையில் பலரைத் தள்ளினார், ஓமந்தூரார் காங்கிரசாட்சியின் திட்டத்தின்படி. யாராரை ஒடுக்க வேண்டுமென்று முறை இருக்கிறதோ, அதன்படி அவர்கள்மீது கோபிக்கவும், அவரும் அவர் உள்ள கட்சியும், கொண்டுள்ள போக்கையும் திட்டத்தையும் கண்டிக்கவும், காரணம் உண்டு—அந்தக் கண்டனம் நியாயமானது—கண்டனத்துக்குப் பக்கபலமாக அவர்களுக்குப் பலம் இல்லை என்பதாலேயே, நியாயமற்ற காரியம் இது என்று கூறிவிட முடியாது. ஓமந்தூராரின் நடவடிக்கையினால்—அவருடைய தலையிலே உள்ள மந்திரி சபையின் போக்கினால், அந்த மந்திரி சபையை அமைத்த காங்கிரசின் கொள்கையினால், உரிமை இழந்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அல்ல, அவரை ஒழிக்க கங்கணம் கட்டியவர்கள், இந்தக் காரியத்துக்குச் 'சபாஷ்', கூறியவர்கள், அவருடைய சொந்தக் கட்சியினர், அவரைக் கவிழ்க்கச் சதி செய்தனர். பெரியார் ராமசாமியோ, ஜீவானந்தமோ அல்ல, கவிழ்க்கும் வேலைக்குக் கிளம்பினவர்கள். ஓமந்தூரார் போலவே கதரணிந்து, அவருடனேயே காங்கிரசில் தங்கி, அவருக்குக் கிடைத்தது போலவே மஞ்சள் பெட்டியின் மகத்துவத்தைப் பெற்று மக்களின் ஆட்சி மன்றத்திலே இடம் பிடித்துக் கொண்ட வைத்தியநாத ஐயரும், வரதாச்சாரியாரும், கிளம்பினர்! காசா சுப்பாராவ் ஜல்லடம் கட்டினார். பாரததேவி ஆசிரியர் ராமரத்தின ஐயர் சரம் விட்டார். இந்துஸ்தான் ஆசிரியர் நாராயண ஐயங்கார் இழித்தும் பழித்தும் எழுதினார். இவைகளைக்கண்ட மக்கள் பி ரா ம ண ர் ஒழிக என்று கூவாமல் வேறென்ன சொல்லிக் கூவமுடியும்? ராதாபாய் மஞ்ளரின் புண்பட்ட உள்ளம் புண்படுமோ என்ரு அந்த நேரத்தில் தோன்றும்! ஓமந்தூரார் ஒரு தவறும் செய்யவில்லை. அவரிடம் ஒரு குறையும் காணோம். அவரை, மதுரை ஐயரும், திருவல்லிக்கேணி ஆச்சாரியாரும், ஆந்திரதேசப்பந்துலுவும் எதிர்க்கிறார்களே காரணமின்றி, என்று எண்ணியபோது உள்ளம் கொதித்தது. அந்தக் கொதிப்பிலே இருந்து பிறந்தது ஓர் முழக்கம்—பிராமணர் ஒழிக என்று. இப்படி எல்லாம் கூவலாமா? அதிலும் காங்கிரஸ்காரர்கள் இப்படிக் கூச்சலிடலாமா?

என்று கேட்கிருர் டாக்டர் சுப்பராயன். இப்படி எல்லாம் சதி செய்வதா நல்லவரை வீழ்த்த! அதிலும் காங்கிரஸ்காரர் காங்கிரஸ் கண்ணியரை கவிழ்ப்பதா, என்று மக்கள் கேட்பர்—ஆனால் குறை கூறுபவரோ, அமைச்சராக இருப்பவர்—போலீஸ் இலாகாவின் பொறுப்பைக் கொண்டுள்ளவர்.

"என் காதிலே அந்தச் சத்தம் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோலிருந்தது" என்ருர் டாக்டர். "ஓமந்தூராரை ஒரு நேர்மையான காரணமுமின்றி, அவருடைய சொந்தக் கட்சியினர் என்றே கூறிக்கொண்டு கவிழ்க்க வேலை செய்தார்களே, சில ஐயமார்கள், அதைக் கண்டபோது, எங்கள் கண்களிலே பழுக்கக் காய்ச்சிய இரும்புத்துண்டுகள் நுழைந்தது போலிருந்தது டாக்டரே! நீர், இந்த வேதனையை அறியமாட்டீர்!" என்று மக்கள் கூறுவர்—மந்திரியாருக்கு மேலும் கோபத்தை மூட்டினல், அவருடைய அதிகாரம் தாக்கக் கிளம்பி வருமே, என்று மட்டுமே, நேரடியாகக் கூருமலிருக்கிருர்கள். கூருவிட்டாலும், டாக்டர் சுப்பராயன், ஏன் யோசிக்கக் கூடாது—யோசித்தால், மக்கள் என்ன கூறுவார்கள் என்பது புரியுமே—இவருடைய காது வேதனைப்பட்டதுதானு பிரமாதம்? மக்களின் மனம் அடைந்த வேதனையை விடவா இவருடைய வேதனை அதிகம்?

இமயமே சாய்ந்திட்டாலும்
இம்மியும் நேர்மை நீங்கார்
அமைதியின் வடிவமானுர்
அன்பினல் ஆளவந்த
தமிழகக் காந்தி ராமசாமி
நம் முதலமைச்சர்
கமற் தரும் புகழால் மீண்டும்
கட்சியின் தலைவரானுர்.

என்று, களிப்புக் கவிதை, தினசரியில் வெளிவந்தது.

கமழ்தரும் புகழ்! தமிழகக் காந்தியாம் ராமசாமிக்கு! ஆனல், அந்தப் புகழ் மணத்தை முடை நாற்றம் என்று கூறினர்

சிலர்—அவர்கள் இனியும் அதைக்கூறுவர்— தமிழகக்காந்தி ராமசாமியைமட்டுமல்ல, திராவிடத் தந்தை ராம சாமியையும்! இப்படி ஒரு கூட்டம் எர்த்தபடியே இருக்கும் அவ்வப் போது நேர்மையின் வெற்றிக்காக வேலை செய்தபடிதான் இருந்ததாக வேண்டும் என்பதுதான் தமிழகத்தின் தனிப் பண்போ? ஒரே கூட்டத்துக்குள் இருந்துகொண்டு, ஒரே கொடி, ஒரே கட்சி என்று சொந்தம் பேசிக்கொண்டு இருந் தாலும், தமிழகக் காந்தி என்று தக்கோர் புகழ்ந்தாலும். சுயநலக் கூட்டத்தாரின் சூழ்ச்சியும் வியன்மகைக வகுப்புவாத வெறியும், தாக்கியபடிதான் இருக்குமென்றுல், காங்கிரஸ் ராமசாமியாக இருப்பவர் எந்த விதத்திலே திராவிட ராமசாமியைவிட அதிக மேலான நிலையில் இருக்கிறர் என்று கேட்கிறேம். உள்ளே இருந்தபடி, காங்கிரஸ் ராமசாமி, உள்ளம் குமுறுவதும், வெளியே இருந்தபடி வேல் பாய்ந்த உள்ளத்துடன், திராவிட ராமசாமி இருப்பதுதானு, இனியும் நாட்டிற்குரிய இலட்சணம்? இந்த வேதனைதரும் நிலைபோக,

மார்க்கமே கிடையாதா? பார்ப்பனத் துவேஷி பெரியார் என்று பகையை மூட்டினர், பாரத புத்திரர் என்று, பார்ப்பனர், அல்லாதவர், ஆகிய அனைவரையும் கூறிக்களித்துப் பெருமை யடைந்த தமிழகக் காந்திக்கும், திராவிட ராமசாமிக்குள்ளது போன்றே எதிர்ப்பு இருக்கக்காண்கிறேம், ஏன் இந்த நிலை என்று கேட்க, நாட்டிலே நேர்மையாளர்கள் எவருமே இல்லையா? எந்த ரகமான ராமசாமியாக இருந்தாலும் எதிர்ப்பு நிலை, ஒரே அளவாகவும், குறிப்பிட்ட ஒரே இடத்திலிருந்தும் வருவதை ஏன் உணர முடியவில்லை. எப்போது உணருவர்?

# வெள்ளி முளைக்க 8 ஆண்டுகள்!

மேடையில் பேசும் போது, எல்லோரும் சரியாகத்தான் பேசுகிறார்கள். ஆனால் தனியே சந்தித்துப் பேசுகையில் வகுப்பு வாதம் அவர்களைப் பிடித்துக் கொள்கிறது.

இந்த நிலைமை நீடிக்குமானால், இந்தியா முன்னேற முடியாது என்று முதலமைச்சர் ஓமந்தூரார், சென்னையில் கடந்த ஆண்டில் பேசியிருக்கிறார்.

வெளுத்ததெல்லாம் பால், கருத்ததெல்லாம் நீர் என்று நம்புபவர், ஓமந்தூரார் என்று கூறுகிறார்கள். அப்படிப் பட்டவர், 'ராஜதந்திரத்துக்காக' இதுபோல் பேசியிருக்க முடியாது. உண்மையாகவே, உள்ளத்திலிருந்தே இந்தக் கருத்து வெளிவந்திருக்க வேண்டும். வெறும் உதட்டசைவாக இருக்க முடியாது.

முதலமைச்சரின் இந்தப் பேச்சிலே, சலிப்பும் திகைப்பும் தோய்ந்திருக்கிறது. வகுப்பு வாதம் கூடாது என்பது முதல மைச்சரின் ஆவல். அந்த ஆவலின் காரணமாக அவர் வகுப்பு வாதம் எங்காவது தலைகாட்டுகிறதா என்று தேடிப்பார்க்கிறார்–யார் வகுப்புவாதம் பேசுகிறார்கள் என்று பார்க்கிறார். மேடை ஏறிப் பேசுபவர்களைக் கவனிக்கிறார். அவர்கள் யாரும், வகுப்பு வாதம் பேசுவதில்லை—ஆனால் தனிப்பட்ட முறையில் சந்திக்கும் போது, வகுப்புவாதம் அவர் எதிரே தெரிகிறது–எப்படி வந்தது ? —அவர் திகைக்கிறார் !

மேடை ஏறி, இந்தியர், பாரத புத்ரர் என்று பேசிய சிலர், முதலமைச்சர் முன்போ, அல்லது அவர் கவனிக்கிறார் என்பதறி யாமல் வேறு யாரிடமோ, 'வகுப்புவாதியாக'ப் பேசியிருக்க வேண்டும்—அதனாலேதான் சலிப்பும் திகைப்பும் தோய்ந்த

குரலில், முதலமைச்சர் கூறுகிறார்; மேடை ஏறிப்பேசும்போது சரியாகத்தான் பேசுகிறார்கள். தனிப்பட்ட முறையிலேயோ வகுப்புவாதம் பேசுகிறார்கள் என்று.

"வாங்க! சௌக்கியந்தானே! கதர் விற்பனை எப்படி? அரிஜன சங்கம் சரியாக வேலை செய்கிறதா?"—என்று முதலமைச்சர், ஏதோ ஓர் ஊரிலிருந்து வந்த, காங்கிரஸ் தோழரை விசாரிக்கிறார். அவர், "சௌக்கியந்தான்! கதர் விற்பனை பரவாயில்லை!" என்று பதில் கூறிவிட்டு, "இது கிடக்கட்டும், ஏன் இப்படி ஓரே பார்ப்பன ராஜ்யமாகி வருகிறது—" என்று ஒரு வெடிகுண்டு வீசுகிறார். முதலமைச்சர் அருவெறுப்படைந்து, "என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்க, குறை கூறியவர் "எங்கள் ஊரிலே கலெக்டர் பார்ப்பனர், டிப்டியாவது ஒரு தமிழனாக இருக்க வேண்டுமென்று நான் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோலச் சொன்னேன்— சட்டையே செய்யாமல், டிப்டியும் ஒரு ஐயராகவே கொண்டு வந்து போட்டீர்கள். இது என்ன நியாயம்? இப்படி, பெரிய உத்தியோகஸ்தரெல்லாம், ஐயர்மார்களாக இருந்தால், நாங்கள் என்ன செய்வது?" என்று கூறுகிறார். முதலமைச்சர் திகைக்கிறார். "அடடா, எப்படிப் பட்ட தேசபக்தர் இவர். அலிசபுரம் சிறையிலே ஆறு வருஷம் இருந்தார்—அப்பழுக்கற்ற தியாகி. இப்படிப்பட்டவர், வகுப்பு வாதம் பேசுகிறாரே! என்னென்பது இந்தப்போக்கை? சென்ற மாதம், வகுப்புவாதம் ஒரு கொடிய நோய் என்று பேசினார், என்று பத்திரிகையில் படித்தேனே—என் எதிரே இப்போது வகுப்புவாதம் பேசுகிறாரே!" என்று எண்ணித் திகைக்கிறார்.

இவ்விதமான பல சம்பவங்களைக் கண்ட அனுபவத்தால் மட்டுமே, முதலமைச்சர் திகைத்துப் போய், அன்று சென்னையில் அவ்விதம் பேசியிருக்க வேண்டும். அவருடைய அனுபவம், காங்கிரஸ் வட்டாரத்திலே பெயர் பெற்றதாகத் தானே இருக்க முடியும்—நமது பக்கம் கூட அவர் தலை வைத்துப் படுத்தறியாதவராயிற்றே! அனுபவ பூர்வமாக ஓர் உண்மையை முதலமைச்சர் கண்டறிந்திருக்கிறார்: வகுப்பு வாதம், மேடையில் தெரிவதில்லை. தனிப்பட்ட சந்திப்புக்களின் போது, அதன் தாண்டவம்

இருக்கிறது. அவர் திகைக்கிறார். மேடையிலே வகுப்பு வாதம் பேசுபவர் இல்லை—செயலிலும், தனியான பேச்சுகளிலும், வகுப்பு வாதம் வேலை செய்கிறது என்று அனுபவப் பூர்வமாக கண்டறிந்து, திகைத்து, அந்த வகுப்பு வாதம், இந்தியாவையே நாசமாக்கி விடும் என்று கூறிக் கவலைப்பட்டு, வகுப்பு வாதத்தை விட்டொழிக்கும்படி, அன்புரை வழங்குகிறார். ஆனால் முதலமைச்சர் ஓமந்தூராரே, இன்று ஓர் வகுப்பு வாதியாகக் காணப்படுகிறார், பல காங்கிரஸ் தலைவர்களின் கண்களுக்கு !!

வகுப்பு வாதம் கூடாது என்று தான் அவர் பேசுகிறார். ஆனால் அவரை வகுப்புவாதி என்று தான், அவர் வாழும் காங்கிரஸ் வட்டாரத்திலேயே சிலர் கூறுகிறார்கள். பாரததேவி சித்திர நடையிலேயே எழுதிற்று, விபூதி பூசும் ராமசாமிப் பெரியார் இவர் ! என்று. சுதந்திரா எனும் ஆங்கில வார இதழில், ஓமந்தூரார் ஓர் வகுப்புவாதி என்று பொதுவாகக் கூறியதோடு விட வில்லை, அவர் ஓர் 'பிராமணத் துவேஷி' என்று எழுதியதுடன் திருப்தி அடைய வில்லை, அவருடைய தலைமையில் நடைபெறும் மந்திரி சபையே பிராமணத் துவேஷ சபை!! என்று சென்ற இதழில் கூட எழுதி இருக்கிறது.

வகுப்பு வாதத்தை விரட்டப் போய், வகுப்புவாதி என்ற தூற்றலைப் பெற்றுக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர். இது கண்டு, அவர் மேலும் திகைப்படையக் கூடும். திகைப்பு கூடாது, தெளிவு பெற. சற்றுத் தீர யோசிக்க வேண்டும். வகுப்பு வாதம் என்றால் என்ன? ஏன், அது மாபெரும் குற்றமாக கூறப்படுகிறது ? யாரால் கூறப்படுகிறது ? எங்கெந்தச் சமயத்தில் கூறப்படுகிறது ? என்ன நோக்கத்துடன் கூறப்படுகிறது?— இவைகளைப் பற்றி முதலமைச்சரும் அவர் வழி சிந்திக்கும் நபர்களும் யோசிக்க வேண்டும்—அப்போது, வகுப்பு வாதத்தின் பிறப்புவளர்ப்பு விளங்கும்—உண்மைக் குற்றவாளிகள் தெரிவர்.

மேடையை மட்டும் கவனித்தால், வகுப்பு வாதம் தெரியக் காணும் என்கிறார் முதலமைச்சர். அது முழு உண்மையல்ல.

பிரிட்டிஷார், இவ்வளவு பெரிய நாட்டை எப்படி அடக்கி ஆள முடிந்தது ?

நாம் நாற்பது கோடி மக்கள்—ஆனால் நாலாயிரம் ஜாதிகளாகப் பிரிந்து, பிளவுபட்டுப் பாழானோம். உன் ஜாதி பெரிது, என் ஜாதி உயர்ந்தது, நீ மட்டம், நீ தாழ்ந்த ஜாதி என்று நமக்குள் சண்டையிட்டு நாசமானோம். இதனைச் சாதகமாக்கிக் கொண்டான் அன்னியன். பாழான சாதி, பேதம் இந்த நாட்டிலே இருக்கும் வரையில் நாடு உருப்படாது.

வீணான ஜாதி பேதத்தாலே தான், நம் நாடு வெள்ளைக்காரனிடம் இவ்வளவு காலம் அடிமைப்பட்டுக் கிடந்தது.

"தமிழர்கள், ஜாதி பேதத்தை அடியோடு விட்டொழிக்க வேண்டும்.

ஒன்றே குலம்—ஒருவனே தேவனும்,

ஜாதி இரண்டொழிய வேறில்லை.

நாமெல்லாம் இந்தியர்—தமிழர். நமக்குள் ஒற்றுமை வேண்டும், வகுப்பு வாதம் கூடாது"

"அவாளவாளுக்கு ஒரு ஜாதின்னு ஏற்பட்டிருக்கு. அது சரியோ, தப்போ, நம்மாலே ஆகிற காரியமல்ல அது. மேலும் இன்று நேற்று ஏற்பட்ட விஷயமல்ல. ஞானஸ்தாள், ஆதி நாட்களிலே, தீர்க்காலோசனைக்குப் பிறகு, சாஸ்திரோக்தமாகச் செய்த ஏற்பாடு. வர்ணாஸ்ரமம், சனாதனம் என்று அந்தக் காலத்திலே பெரியவர்கள் ஏற்பாடு செய்தான்னா, அது அர்த்தமற்றதாகவோ, கேவலமானதாகவோ இருக்க முடியாது. மகரிஷிகள் காலத்தில் ஏற்பட்ட முறை. இப்போது காலம் மாறிண்டு போறதாலே, ஒரு சமயம் அந்த ஏற்பாடு, தப்புண்ணு கூடத் தோன்றலாம். தப்போ, சரியோ, அது நம்ம பூர்வீகச் சொத்து, அதை நம்புகிறவர் நம்பட்டும், வேண்டாமன்னு சொல்கிறவா சொல்லட்டும். ஆனா நான் என்ன சொல்றேன்னா, ஜாதி பேதத்தை பிரமாதப் படுத்திண்டு, சதா சர்வகாலமும் அதையேபேசிண்டு ஒரு ஜாதியாரைப் பழிச்சிண்டு, வகுப்பு வாதம் பேசிண்டு இருக்கிறது, கூடாதுன்னுதான் சொல்றேன்.

அது நம்ம தேசத்துக்கே பெரிய நாசமான காரியமாகும். அவா ளவா ஜாதி உசத்திதான்; இதிலே சண்டை எதற்கு, சச்சரவு எதற்கு? எல்லோரும் சகோதரராளாகப் பாவிச்சுண்டு, வாழ்ந் தாதான் க்ஷேமம்.''

கூர்ந்து கவனித்தால், மேடைப் பேச்சிலேயே, இந்த இரு விதக்'குரல்' கிளம்பக் காணலாம். முன்னது, உறுதியுடன் உள்ள குரல்—தீமையைத் தீய்த்தாக வேண்டும் என்ற தீர்மான மான குரல்! மற்றது, தட்டுத் தடுமாறி, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், ஏனோ தானோவென்றுள்ள குரல்! இந்த இரு விதங்களும், காங்கிரஸ் மேடையில் உண்டு—நெடு நாட்களாகவும்—இன்றும். இந்த இரு வகைப் பேச்சில் பின்ன தற்கே, பத்திரிகைகளில் தாராளமாக இடம் கிடைக்கும்! எனவே, மேடைப் பேச்சு மூலம், அதிகமாகப் பரவிய கருத்து, இரண்டாவதாக உள்ள 'இரண்டுங் கெட்டான்' கருத்துத் தான்!!

இப்போதும், முதலமைச்சர் பரீட்சை பார்க்கலாம். அவர் வகுப்புவாதம் பேசவேண்டாம். ஜாதிக்கொடுமை ஒழிய வேண்டும் என்று பேசி, நாட்டிலே என்னென்ன வகையான கொடுமைகள் ஜாதியின் பெயரால் நடைபெறுகின்றன என்று விளக்கட்டும்—எத்தனை இதழ்கள் இருட்டடிப்புச் செய்கின் றன என்பதை அனுபவப் பூர்வமாகக் கண்டு கொள்ளலாம்.

**வகுப்புவாதி!** மிகமிகச் சாமர்த்தியமாக பொதுமக்கள் முன்னிலையில் நடமாட விடப்பட்ட சொல்! தன்னலக்காரரின் அகராதியில் முளைத்த இச்சொல் தமிழகத்திலே, சமூக நீதிக் காகப் பாடுபட, என்றையத்தினம் சிலர் கிளம்பினார்களோ, அன்றுமுதல் உலவிவரும் சொல்!! என்றையத் தினம் ஆதிக்கக் காரரைப் பார்த்து, விழிப்பு நிலை பெற்ற அடிமைகள், இது என்னய்யா அநீதி என்று கேட்கத் தொடங்கினார்களோ, என்றையத்தினம் முதற்கொண்டு, நீதிக்காக வாதாடவும், பிறகு போராடவும் சிலர் முன் வந்தார்களோ, அன்று முதல் இந்தச் சொல் கிளம்பிற்று. தூய்மையான மனமுள்ளவர்களை

இச்சொல் துடிதுடிக்கச் செய்திருக்கிறது! பலருடைய அரசியல் வாழ்வை வாட்டி வதைக்கிறது—இன்றும் வதைக்கிறது. விழிப்புணர்ச்சியுடன் காணப்பட்டால், விவேகியாகத் தெரிந்தால், வீரனுகைக் காட்சி தந்தால் போதும், இந்தச் சொல் கிளம்பும், அவரை வதைக்க. அரசியல் வரலாற்றை, இந்தச் சொல் பாதித்ததைப் போல, டயரின் குண்டுகள்கூடப் பாதிக்கவில்லை. இதனுல், மனம் உடைந்தவர்கள், வாழ்க்கை நொருங்கியவர்கள் எவ்வளவு பேர்! சந்தேகமும் கண்டனமும், சொல்லடியும் கல்லடியும், எவ்வளவு பேருக்கு இந்தச்சொல் வாங்கித் தந்தது! இந்தச் சொல்லின் சரிதமே ஓர் சோகத் தொடர் கதை! தியாகராயரில் தொடங்கி இன்று ஓமந்தூரார் வரையிலே உள்ள தொடர்கதை! ஓமந்தூரார் மந்திரி சபையை, இன்று வகுப்புவாத மந்திரிசபை, பழைய ஜஸ்டிஸ்கட்சி வாடை வீசும் மந்திரிசபை என்றெல்லாம், காங்கிரஸ் கட்சியினரே கூறுகின்றனர்.

ஓமந்தூராரைச் சில காங்கிரஸ்காரர்கள் வகுப்புவாதி என்று கூறுகின்றனர்.

ஓமந்தூரார் மந்திரிசபையை ஆதரிப்பவர்கள், மந்திரி சபையைக் குறைகூறுபவர்களை, வகுப்புவாதிகள் என்று கண்டிக்கின்றனர்.

ஒரு பிரிவினர், மற்றப் பிரிவினரின் கண்களுக்கு வகுப்பு வாதிகளாகத் தெரிகின்றனர்.

ஓமந்தூரார் உள்ளம் நோகிறது! வகுப்புவாதத்தை ஒழிக்க அரும்பாடுபடும் நம்மை வகுப்புவாதி என்று வகுப்பு வாதச் செயல் புரிபவர் குறைகூறுகிருர்களே! இது என்ன காலக் கேடு!—என்று எண்ணி வருந்துகிருர்.

அதுபோலவே, காங்கிரஸ் கட்சியிலே ஒருசாரார் பேசுவது தேசியம்! காரியமோ அசல் வகுப்புவாதம்— இந்த இலட்சணத்தில் வகுப்பு வாதத்தை ஒழிக்கப் போவதாக வேறு வாய் வீச்சு! "இப்படி ஒரு வகுப்பு வாதியை நாங்கள் கண்டதே இல்லை"—என்று கண்டிக்கிருர்கள்.

ஆந்தை குயிலைப் பழிக்கிறது என்கின்றனர் ஒரு சாரார்.

பூனை போதகாசிரியர் போல வேடம் போடுகிறது என்கின்றனர் மற்றோர் சாரார்.

இப்படி ஒரே கட்சியிலுள்ள இரு பிரிவுகளுக்குள், ஏற்பட் மனபேதம், வகுப்புவாதி என்ற அந்தப்பழைய சொல்லையே ஆயுதமாகக் கொண்ட போருக்கு அடிகோலுவதாகிவிட்டது. இதிலே நியாயம் எந்தப்பக்கம் இருக்கிறது என்பது அல்ல, முக்கியமான பிரச்னை. இந்த வகுப்பு வாதம் என்ற சொல்லுக்குள் இதுவரை அடைத்துவைத்துள்ள குற்றச்சாட்டு, எத்தன்மையது என்பதே முக்கியமான பிரச்னை. இதற்கு இன்றைய அரசியல் நிலைமையை மட்டும் கவனித்தால் போதாது. வகுப்பு வாதம் என்றசொல் பிறந்த காலத்தைக் கவனிக்க வேண்டும்.

தமிழர் நன்கு அறிவர்—ஓயாது பிரச்சாரம் இதுபற்றி நடந்திருப்பதால்—வகுப்புவாதி என்ற சொல்லை, காங்கிரசார் பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்பட்ட உடனே, சிருஷ்டித்து ஏவினர் என்பதை.

சமூகத்திலே பல ஜாதிகள்—அவைகளுக்கிடையே உயர்வு தாழ்வுகள்—அதன் பலனாகச் சிலருக்கு ஆதிக்கம் பலருக்கு அடிமைத்தனம்—அந்த ஆதிக்கத்தின் விளைவாகச் சிலருக்குச் சுகவாழ்வு, அடிமைத் தனத்தின் பலனாகப் பலருக்குப் பாதி வாழ்வு! இப்பப்பட்ட நிலையை மாற்றி' சமூக நீதி ஏற்படுத்த வேண்டும். என்று சிலர் எண்ணினர்! இந்த எண்ணம் கொண்டது தவரு? சமூகத்தில். மிகப்பெரும்பாலோராகப் பார்ப்பனரல்லாதாரும், சிறுபான்மையினராகப் பார்ப்பனரும் இருப்பதும் பெரும்பாலோர், அந்தச் சிறுபான்மையினரை, சாஸ்திர ஆதாரப்படியும், பழக்க வழக்கத்தின் படியும், மேல் ஜாதியினராகக் கொண்டிருப்பதும், இந்த நிலைமையினால், பெரும்பாலோர், கல்வி, தொழில், பொருளியல், அரசியல், மத இயல், முதலியவற்றில் உரிய அளவு இடமோ, வசதியோ பெருமல் இருந்தும்

அதே துறைகளில் சிறுபான்மை வகுப்பினரான பார்ப்பனர், மிக மிக அதிகமான உயர்வு பெற்று விளங்கியதும், கருத்துள்ளோர் அனைவருக்கும் தெரிந்தது. அப்படிப்பட்டவர்களிலே, ஆண்மையாளர்கள் சிலர், இந்த அநீதி ஒழிக்கப்படவேண்டும் என்று கூறினர்—வகுப்பு நீதி கேட்டனர்—அந்த வகுப்பு நீதி கோரிக்கை, தங்கள் ஆதிக்கத்துக்கு உலை வைப்பதாகும் என்று எண்ணிய பார்ப்பனர், நீதி கேட்டவர்களை **வகுப்பு வாதிகள்** என்றனர்—அந்தச் சொல், நிபந்தனைப் பதமாகி, தக்க பிரசார சாதனம் இருந்த காரணத்தால், வகுப்பு நீதி கோரியவர்களை, வகுப்பு வாதிகள் என்று பொதுமக்களே எண்ணி ஏசக்கூடிய ஓர் வேதனையான நிலைமையை உண்டாக்கி விட்டது.

பிரசார பீரங்கிகள் முழங்கின! எங்கும்!! வகுப்பு வாதி! வகுப்புவாதி!! கண்டனக் கணைகள் சரமாரியாகக் கிளம்பின, பலருடைய அரசியல் வாழ்வை, வதைத்தன—இருதயங்களைச் சிதைத்தன! காங்கிரஸ் மேடை ஏறினதும், சபாஷ் பட்டமும், பத்திரிகையில் இடமும் பெற வேண்டுமானால், வெகு சுலபம். **வகுப்பு வாதிகளைக் குழி தோண்டிப் புதைப்போம்** என்று கூறினால் போதும்! கடந்த இருபதாண்டுகளாக, தமிழ் நாட்டு அரசியலில், இந்த அணுகுண்டு உபயோகப்படுத்தப்பட்டது, நீதி கேட்டவர்களுக்கு எதிராக.

இப்போது காங்கிரசிலேயே ஒரு பகுதி, மற்றோர் பகுதியை வகுப்புவாதி என்று குற்றம் சாற்றுவதைக் காண்கிறோம்.

வகுப்புவாதி என்று முதன் முதல், அநியாயமாக நிந்திக்கப்பட்ட நீதிக் கட்சியினர், செய்ய விரும்பியதெல்லாம், பெரும்பான்மையினராக உள்ள பார்ப்பனரல்லாதாரை, அவர்களின் வீழ்ச்சியுற்ற, தாழ்நிலையிலிருந்து, எழுச்சியுறச் செய்து, சம உரிமை பெறச் செய்வது என்பது தான். **இதற்குத் தான் வகுப்பு வாதம்** என்று பெயரிடப்பட்டது.

**"தமிழ் நாட்டில் ஒரு விஷமப் பிரசாரம் சமீப காலத்தில் நடந்து வருகிறது. மெஜாரிட்டி வகுப்பாரைத் தூக்கி விடுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தாலும், உடனே அதைப் பிராமணத் துவேஷம் என்று சொல்லுகிறார்கள்,"** என்று **தினசரி,**

'48, ஏப்ரல் 5ம்தேதி, தலையங்கத்தில் தீட்டுகிறது. அதாவது, வகுப்புவாதி, பார்ப்பனத் துவேஷி, என்ற ஏசல், 'தினசரி'யின், கூட்டத்தின் மீது வீழ்ந்த பிறகு.

சமீப காலமாக விஷமப் பிரசாரம் நடை பெறுகிறது என்று தினசரி எழுதுகிறது.முழுஉண்மை அல்ல! தினசரி சொக்கலிங்கனார் தினமணி ஆசிரியராக அமைவதற்கு முன்பிருந்தே நடைபெறுகிறது—கால் நூற்ருண்டாக இக்கடுமொழி வீசப்பட்டு வருகிறது. இந்த விஷமத்தனம் நடைபெறுகிறது— நடைபெற்று வந்திருக்கிறது என்பது மட்டுமல்ல உண்மை. நண்பர் சொக்கலிங்கமும் சேர்ந்து நடத்தி வந்தார், இந்த விஷமப் பிரசாரத்தை !! தன் தலை மீது, இதே வசைச் சொல் வீசப்படும் என்று எண்ணியிருப்பாரா, அந்த நாட்களில் !

அந்த நாட்களில், அவருடைய அறியாப் பருவத்தில், என்ற பொருளில் கொள்கிருேம், அந்த வாசகத்தை.

இன்று, அனுபவம் நிரம்பப் பெற்று, உண்மையில் வகுப்புச் சுயநலமிகள் யார் என்பதைக் கண்டறிந்து, வகுப்பு நீதிக்காகப் போராடக் கிளம்பி, வகுப்புவாதி என்று ஏசப்படுகிருரே, அந்த ஏசல் அவருக்குக் கோபத்தை மட்டுமல்ல, சிறிதளவு வருத்தத்தையும் தந்திருக்கும். இன்று நாம் எந்தக் காரியத்தை வகுப்பு நீதிக்காகச் செய்கிருேமோ, எந்தக் காரியம் செய்வதற்காகத் தூற்றப்படுகிருேமோ, இதையே, பல ஆண்டுகளுக்கு முன்பு, நீதிக் கட்சியினர் செய்த போது, அவர்களை நாம் எவ்வளவு பதை பதைக்கத் திட்டினேம், எவ்விதமெல்லாம் கண்டித்தோம்—என்பது பற்றி, அவர் எண்ணும் போது இரண்டோர் சொட்டுக் கண்ணீர் வராமலிருக்குமா! விஷமப் பிரசாரம்! ஆ ! சமீப காலமாக, இவர் மீது ! பல காலமாக, நம்மவர் மீது !!

மெஜாரட்டி வகுப்பாரைத் தூக்கிவிடுகிற காரியத்தைக் கண்டு, பிராமணத் துவேஷம் என்று விஷமப் பிரசாரம் செய்கிருர்கள் என்று தினசரியார் தீட்டுகிருர்.

* தூக்கிவிடுகிருர்! மெஜாரட்டி வகுப்பை!! இந்த வாதத்தை இவர் எவ்வளவு கேலி செய்தார்! மெஜாரட்டியைத் தூக்கி விடுவதாக? ஏன்! விரல் விட்டு எண்ணக் கூடிய நிலையிலுள்ள பிராமணர்கள் மீது,வீணுகத்துவேஷத்தைக் கிளப்பிக்கொண்டு, பார்ப்பனரல்லாதாரின் நலனைப்பாதுகாப்பதாகப் பறைசாற்று கிருர்கள் இந்த வகுப்புவாதிகள்—இதுவன்றே முன்பு தினசரியார் தீட்டும் பாணி! இன்று? தூக்கிவிடுகிருர்,மெஜாரட்டி வகுப்பினரை! ஆச்சரியம், இவருடைய மாறுதல் அல்ல! மாருது இருக்கும் மெஜாரட்டியின் நிலைமைதான்!! முதல் வகுப்புவாதிக் கும் முதலமைச்சராக ஓமந்தூரார் வீற்றிருப்பதற்கும் இடையே எவ்வளவோ ஆண்டுகள் எத்தனையோ முயற்சிகள்! எனினும், இன்றும், மெஜாரட்டி வகுப்பினர், தூக்கிவிடப்படவேண்டிய நிலை இருக்கிறது! ஏன்? அவ்வளவு கீழே அழுத்தி வைக்கப்பட் டுள்ளனர் தினசரியார் நாட்களிலே, இந்தத் தூக்கிவிடும் பணி தேவை என்ருல், தியாகர்நாட்களிலே, இது எவ்வளவு அதிக மாகத்தேவைப்பட்டிருக்க வேண்டும்? எண்ணிப்பார்க்கவேண் டுகிறேம்,இன்னமும்எண்ணத்தில் தெளிவுபெருதிருப்பவர்களை, சிறு பான்மையோருக்குத்தான் பாதுகாப்புத் தேவை, பெரும் பான்மையினருக்கு ஏன்? என்று பேசினவர்கள், தினசரியாரின் கருத்தைக் கவனித்துத் தெளிவுபெற வேண்டுகிறேம்.

தூங்கிக்கிடந்தவர்களைத் தட்டி எழுப்பிய தியாகர், விழித்த வர்களைப் பார்த்து, உங்கள் நிலை மிகமிகப் பிற்போக்காக இருக் கிறது, முன்னேறுங்கள் துரிதமாக, சகல துறைகளிலும், என்று கூறிஞர், தூக்கிவிடத் தொடங்கிஞர், இதுதான் அவர் செய்த வகுப்புவாதம்! ஆனல், அவருடைய பேரன்மார் காலத்துச் சொக்கலிங்கனுர், தாத்தா கண்டறிந்த திட்டத்தை தத்து வார்த்த விளக்கத்தோடு செய்துகாட்டுகிருர். **"ஜனநாயகம் என்ருல் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். குறிப்பிட்ட காரியங்களை குறிப்பிட்ட வகுப்பார்தான் செய்ய வேண்டுமென்ற கட்டாயமோ,ஏகபோக உரிமையோகிடையாது"** என்று தினசரி தீட்டுகிறது. இதே இலட்சியத்துக்காகத்தான், நமது இயக்கம் இடையுருது பாடுபடுகிறது. இந்தக் கருத் துடன் பணிபுரியத் தொடங்கியபோது, **வகுப்புவாதி, பார்ப்**

**பனத் துவேஷி, வேதநிந்தகன், சாஸ்திர விரோதி, ஆரியவைரி, நாத்தீகன்** என்று சரமாரி தூஷணைகள் நமது இயக்கத்தவரைத் துரத்திக்கொண்டு வந்தன. தூற்றும் சொக்கலிங்கங்களும் என்றேனும் ஓர் நாள், இதே கருத்துக்கு வந்துசேருவார் என்ற நம்பிக்கை ஒன்றுதான் நமது இயக்கத்தவரை இவ்வளவு நிந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளச்செய்தது. அந்த நம்பிக்கையும் வீண் போகவில்லை. நாம் இன்று வரை நீதிக்காக உரிமைக்காகப் போரிடும் எங்களை அழித்தாலும் சரி, கடைசி மூச்சு இருக்கும் வரை உரிமைக்குப் போராடுவோம் என்று மட்டுமே கூறிவந்தோம், நெடுநாட்களுக்குப் பிறகு நாம் வகுத்தவழி நடக்கும் நண்பர் தினசரியார் **"மைனுரிடிகள் மெஜாரிட்டிகளை ஆளமுயற்சிக்கும் போதுதான் தகராருகிளம்புகிறது. லீகர்கள் மைனுரிட்டியாய் இருந்து மெஜாரிட்டியை ஆளமுயற்சித்ததால்தான் இந்தியாவில் அமளி எற்பட்டது, அதே தவறை வேறு யாரும் செய்யாமல் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்"** என்று தீர்மானமாக எழுதியிருக்கிறது! அமளி குமளி! ஜாக்கிரதை!—நாம் உபயோகிக்கமறுக்கும் சொற்கள்—தினசரியிடமிருந்து கிளம்புகின்றன! **"இருக்கிற ஏகபோக உரிமையைக் காப்பாற்றிக்கொள்ள தேசீயம் பேசுவது ராஜீய நாணயமல்ல."** என்றும் எழுதியிருக்கிறது. 1940-ல் நமது இயக்க ஏடு, **விடுதலை** டிசம்பர் 9-ந்தேதி இந்த வகுப்புவாதப் பிரச்னையைப்பற்றி **பார்ப்பனர்** விஷயமாக நாம் கொண்டுள்ள கருத்தைக் கூற விரும்புகிறோம். பார்ப்பனத் துவேஷி என்று கூறப்படும் நாம், பலவிதமான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ளோம். வகுப்புத் துவேஷ விஷயத்தை நாம் மக்களிடை ஊட்டுகிறோம் என்றும், வீணன வகுப்பு வித்தியாசங்களைக் கூறி நாட்டிலே **பிளவை, பேதத்தை, மாச்சரியத்தை, கலகத்தை** உண்டாக்குகிறோம் என்றும், இங்ஙனம் நாம் செய்வதற்குக் காரணம் நமக்குப் பட்டம் பதவி மீதுள்ள ஆசை என்றும் பலப்பல கூறுகின்றனர். பட்டமும், பதவியும் காங்கிரசில் சேர்ந்தால், பாடு படாமல், தொல்லைக்கு ஆளாகாமல், தொந்திரவை மேற்போட்டுக் கொள்ளாமல், பெற முடியும் என்பது நமக்கும் நம்மைத் தூற்றும் தோழர்களுக்கும் தெரியும். இருந்தும் பதவியைச் சுலபத்திலே பெறக்

கூடிய காங்கிரஸ் கூட்டுறவை விட்டு, பதவி கிடைக்காத தொல்லை நிரம்பிய வகுப்புவாதம் பேசுவது ஏன்? என்பதைச் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். "வகுப்புவாதம்" பேசுவதாக 'ஜாதித்துவேஷத்தை' ஊட்டுவதாக, "பார்ப்பன துவேஷம்" பேசுவதாக பாமர மக்களிடை ருசிகரமான பிரசார முறைகளைக் கொண்டு எடுத்துக்கூறி, தேர்தல்களில் நம்மைத் தோற்கடிக்கும் "திறமை" நமது மாற்றார்களிடம் இருக்கிறது என்பது தெரிந்தும், நாம் ஏன் அவர்களை எதிர்க்கிறோம்? சும்மா இருந்தால் சுகம் உண்டு என்பதற்கு அவர்கள் ஜாடை மாடை காட்டியும் நாம் ஏன் சமர்ச் சுழலில் விழுகிறோம்.

வெறும் சுகவாழ்வு, சுயநலம், பட்டம், பதவி, இவைகளே தேவை எனில், இவைகளைச் சுலபத்திலே பெறக்கூடிய வழி எது என்பதை மட்டுமே யோசித்து, காலத்துக்கேற்ற கோல மிட்டு வாழ முடியும், ஆனால் எதற்காகப் புயலின் முன் கப்பலைச் செலுத்துவது போல், போராட்டத்தில் ஈடு படுகிறோம்? எதிரிகளின் சக்தி பாமரரை ஏய்க்கக்கூடிய விதத்தில் இருக்கிறது என்பது தெரிந்தும், நம்மைப் பற்றி தாறுமாறான பிரச்சாரத்தை தந்திரமாகச் செய்யும் கூட்டம் எதுசெய்யினும் செய்க, எத்தகைய தொல்லைதரினும் தருக, என்று உறுதியுடன் நாம் இருக்கக் காரணம் என்ன? நமக்கு, நம் மாற்றார்களின் வலிமை தெரியாதா? தெரியும்! பலவிதமான சாதனங்கள் அவர்களிடம் இருப்பதும் தெரியும். பாமரர் அவர்களின் பிரபாரத்துக்குப் பலியாகிறார்கள் என்பதும் தெரியும். நம்மைத்தாக்க அவர்கள் உபயோகிக்கும் கோடாரிக்கு "காம்புகள்" நம்மவரிலேயே கிடைப்பதும் நன்கு நமக்குத் தெரியும். தெரிந்தும் எதிர்க்கிறோம். பொல்லாங்கும் பழியுமே பரிசாகக் கிடைக்கிறது என்று தெரிந்தும் போரிடுகிறோம்! ஏன்? நமக்கு பித்தமா?

ஆம்? பித்தமே கொண்டுள்ளோம்! ஜாரின் படைபலம், பண பலம், துருப்புகளின் ஈட்டிமுனையின் கூர் தெரிந்தும், லெனின், ஜார் ஆட்சியை ஒழித்தேதீருவேன் என்று ஓயாது கூறி வந்தாரே! உருமாறியும், ஊரூராக அலைந்தும், உற்றார் உறவினரைப்பற்றிக் கவலையற்றும், புரட்சிப் போரை, புது உலக

உற்பத்திப் போரை நடத்தியே தீருவதென "பித்தம்" பிடித்து அலைந்தாரே, அத்தகைய "பித்தம்" நமக்கு இருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை.

எதிர்த்தோர், பாஸ்ட்டில்லி (சிறைக்கூடம்) யில் இருதய வலியுடன் இருப்பது தெரிந்தும், ஈட்டி ஏந்திய வீரர்கள் குதிரைகளின் மீதேறி, மக்களை குத்திக்கொல்வர் என்பது தெரிந்தும் முடி ஆட்சியை எதிர்த்து குடி ஆட்சியை ஏற்படுத்தியே தீருவோம் என்று பிரான்சு நாட்டு மக்கள், புரட்சிப் பித்தம் கொண்டார்களே முன்னம், அத்தகைய பித்தம் நமக்கு உண்டு.

* பல ஆயிரம் ஆண்டுகளாக நாட்டிலே பரவி ஊன்றி, பாமரரை செயலற்ற, சிந்தனையற்ற உருவங்களாக்கி, உழைக்க வைத்து உறிஞ்சி வாழும் பார்ப்பனீயத்தின் பலம் பயங்கரம், பக்க பலம் யாவும் நமக்கு நன்கு தெரிந்திருந்தும், அதனை ஒழித்தே தீருவோம், என்று "பித்தம்" பிடித்தே நாம் அலைகிறோம். பித்தர் லெனின் சோவியத் நாட்டை கண்டது போல, பெரியார் திராவிட நாட்டைக் காணட்டும் என்று கூறுகிறோம்.

ஏனய்யா இத்தனை ஆத்திரம் ? எதற்கு, ஒரு சிறு கூட்டத்தினரான பார்ப்பனர் மீது இத்தனை துவேஷம் ? என்று கேட்கிறார்கள், தோழர்கள். பார்ப்பனர் மீது பாய்வது ஒரு வீரமா ? வேதியர் மீது ஏன் வீணுக மோதிக் கொள்கிறீர் என்று கேட்கிறார்கள். அவர்களை இங்ஙனம் கேட்கவைக்கும் பார்ப்பனருங் கூட இது போலவே கேட்கக்கூடும்; ஆகவே அவர்களுக்கும் அவர் தம் அடியார்களுக்குமாகச் சேர்த்தே கூறுகிறோம். நாம் பார்ப்பனர் மீது மோதிக் கொள்ளவில்லை; பார்ப்பனீயத்தை எதிர்க்கிறோம்.

* பார்ப்பனீயத்தினுல், பார்ப்பனர் என்ற சமூகம், பாடுபடாது வாழவும்,பதமாக இருக்கவும் பதவியில் அமரவும் முடிகிறது என்ற "வெறும் பொருமை" மட்டுமல்ல, நாம் அதனை எதிர்ப்பதற்குக் காரணம்.

* பிளேக் பிடித்த வீட்டிலே பாயையும் தலையணையையும் போட்டுக் கொளுத்துகிருர்கள் என்ருல், பாய்மீதும் தலையணை

மீதும், கோபம், துவேஷம் என்று பொருள் கொள்ள முடியுமா! பிளேக்கால் பீடிக்கப் பட்டவனுக்கு "ஊசி" போடுகிறார்கள் என்றால், டாக்டருக்கு அந்த நோயாளிமீது துவேஷம் என்று பொருள்கூற முடியுமா? அதுபோல்தான், இந்தப் பழைய பெரிய பூபாகத்திலே, பார்ப்பனீயம் என்ற கொடுமை இருக்கிறது. அது உடலை வாட்டுவது மட்டுமல்ல, உள்ளத்தையே வாட்டுகிறது. அது இருக்கும்வரை, அதன் விளைவுகளாகப் பல வேதனைகள் இருந்தபடிதான் இருக்கும்.

* பார்ப்பனீயத்தின் பலனாக, ஒரு பெரிய திராவிட சமுதாயம் சின்னாபின்னப்பட்டுப் போய்க்கிடக்கிறது. பிறவி அடிமைகளாக, பேசும் ஊமைகளாக, நடைப்பிணமாகப் போய்விட்டது. ரோஷமான உணர்ச்சியற்று தடித்த தோலராகி விட்டது.

* தகப்பனுக்கு மேக வியாதி இருப்பின், பிறக்கும் குழந்தை குருடாகும், என்பர் மருத்துவ நூல் கற்றோர். குருட்டுக் குழவிக்கு, குவலயத்தின் குதூகலக் காட்சி எங்ஙனம் தெரியும்? அதுபோல்தான் திராவிடச் சமுதாயம், பார்ப்பனீயம் எனும் மேக நோயால் பீடிக்கப்பட்டு இருக்கிறது. பிறக்கும் திராவிடன் குருடனாகிறான். எனவேதான் இந்தப் பார்ப்பனீயத்தை ஒழிக்க விரும்புகிறோம்.

* ஒற்றுமை, கட்டுப்பாடு, வீரஉணர்ச்சி. தன்மானம், இவைகள் ஒரு பெரிய சமுதாயத்துக்கு வந்தால்தான் ஏகாதிபத்யத்தை எதிர்த்து வெல்ல முடியும். இக்குணங்கள் இன்று நம் மக்களிடை இல்லாது போனதற்குக் காரணம் பார்ப்பனீயந்தான். எனவேதான் நாம் அதனை எதிர்க்கிறோம். முடியுமா வெல்ல என்பர், முடிவைப்பற்றிக் கவலை இல்லை, கடமை இது என்போம். வெற்றி கிடைக்காதா? என்பர், வெள்ளி முளைக்குது என்போம் என்று தீட்டிற்று.

வெள்ளி முளைக்குது! என்றோம். எட்டு ஆண்டுகள் பிடித்தன வெள்ளி, தினசரி நிலையத்திலே இருந்து கிளம்ப. பட்டகஷ்டம் வீண் போகவில்லை. யார் உண்மை வகுப்பு

வாதிகள் என்பதை நாடு உணரத் தொடங்கி விட்டது. வேதனைக்கு ஆளான ஓமந்தூராரும், வேல் தாக்கிய வேழமெனச் சீறும் தினசரியும், பார்ப்பனீயம் என்பது பிரித்தானியம் போலவே, ஒழிக்கப்பட வேண்டிய முறைதான் என்பதை, ஆண்மையுடன் அறிவித்துவிட வேண்டும். மெள்ள மெள்ள நகருவோம் என்பதில் பலன் இல்லை. பார்ப்பனீயத்தைக் காரணம் காட்டி ஆதரிக்க எந்த அறிவாளியும் முன் வரமுடியாது. அந்த முறையை முறியடிக்கப் போரிடுவதால், ஓமந்தூராருக்கும், அவரை ஆதரிப்போருக்கும், வகுப்புவாதி என்ற தூற்றலுடன், ஒரு சமயம் நாத்திகர் என்ற ஏசல் கிடைக்கக்கூடும்—ஆனால் நெஞ்சில் கைவைத்து நேர்மையாக நடக்க விரும்பும் யாரும், தூற்றலையும் ஏசலையும் பொருட்படுத்தக் கூடாது. பொருட்படுத்த மாட்டார்கள் எவ்வளவு நியாயமான காரியத்தைச் செய்தாலும். அதனால் யாருடைய ஆதிக்கமோ சுயநலமோ கெடும் என்று தெரிந்திருந்தால், அவர்கள் ஏசவும் செய்வர்—தூற்றவும் செய்வர்—* **எவ்வளவு இன்சொல்லால், அன்பையும் சக்தியையும் உத்தமர் காந்தியார் போதித்தார்! கோட்சே இதற்கே அவரைக் கொல்லத் துணிந்தானல்லவா! உத்தமர் உண்மைக்காக உயிரைத் தந்தபோது, நாம் சாதாரணப் புகழை, பதவியை இழந்தால்தான் என்ன? நஷ்டம் அல்ல—நாட்டுக்கு விமோசனம் கிடைக்கும்.**

76030

# சென்னை உயர்நீதி மன்றம்

1949-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 4-ம் நாள் வெள்ளிக் கிழமை.

கனம் திரு. பக்கால வெங்கட ராஜமன்னார் பிரதம நீதிபதி.
கனம் திரு. நீதிபதி பஞ்சாபகேச சாஸ்திரி.
கனம் திரு. நீதிபதி சந்திரா ரெட்டி.

ஓ. பி. நீ. 293—(1949)

1931-ம் வருடத்திய இந்தியப் பத்திரிகைகள் (அவசரச்) சட்டத்தின் 23-வது பிரிவின்படிக்கு.

காஞ்சீபுரத்திலிருந்து வெளிவரும் தமிழ் வார வெளியீடாகிய "திராவிட நாடு" பற்றி.

| | |
|---|---|
| மனுதாரர் | சி. என். அண்ணாதுரை |
| பிரதிவாதி | சென்னை மாகாண சர்க்கார். |

நீதி மன்றம் அளித்த தீர்ப்பின் விவரம்:—

## 1949-ம் வருடத்திய ஓ. பி. நீ. 293.

மனுதாரர் காஞ்சீபுரத்தில் அச்சாகி வெளியிடப்பெறும் "திராவிடநாடு" தமிழ்வார வெளியீட்டின் ஆசிரியரும் வெளியீட்டாளருமாவார். செங்கற்பட்டு மாவட்ட நீதிபதியிடம் 1949 ஜூன் 25-ந் தேதிக்குள்ளாக ரூ. 3000 ஜாமீன் தொகை கட்டியாக வேண்டுமென்று தனக்கு மாகாண சர்க்கார் 25—5—1949-ந் தேதியிட்டுப் பிறப்பித்த உத்தரவை ரத்துசெய்ய வேண்டுமென்பது மனுதாரரின் தாவாவாகும். மனுதாரரின் 4—4—48, 18—4—48 தேதியிட்ட இதழ்களில் 1931-ம் வருடத்திய இந்தியப் பத்திரிகைகள் (அவசரச்) சட்டத்தின் 4-வது பிரிவைச் சேர்ந்த (1)-வது உட்பிரிவின் கீழ்வரும் (யெச்) சிறு பிரிவின் கீழ் விவரிக்கப்படுவதை யொத்த தன்மை வாய்ந்த விஷயங்கள்

அடங்கியிருக்கின்றன என்பதாகக் காரணங்காட்டி மாகாண சர்க்கார் மேற்கண்ட உத்தரவை ஷை சட்டத்தின் 7-வது பிரிவைச்சேர்ந்த (3) உட்பிரிவின்கீழ் பிறப்பித்துள்ளனர்.

மேல் குறிப்பிடப்பெற்ற இரு இதழ்களிலுமிருந்தும் ஷை உத்தரவுக்குக் காரணமான பகுதிகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பெற்று அவ்வுத்தரவுடனேயே இணைக்கப்பட்டிருந்தன. மனுதாரர் இவ்விண்ணப்பத்தை ஷை சட்டத்தின் 23-வது பிரிவின்கீழ் சமர்ப்பித்துள்ளார். இந்நீதிமன்றம் தீர்ப்புக்கூற வேண்டியது இதுதான். இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப் பெற்றிருக்கும் அப்பத்திரிகையில் ஷை சட்டத்தின் 4 (1) (யெச்) பிரிவின் கீழ் விவரிக்கப்படுவதை யொத்த தன்மை வாய்ந்த சொற்கள் எவையும் காணப்படுகின்றனவா இல்லையா என்பதேயாகும்.

4 [1) (யெச்) பிரிவின் வரையறைக்குள் விவரிக்கப்படும் சொற்கள்:

"மன்னர்பிரான் குடிமக்களாகிய பல்வேறுபட்ட வகுப்பினரிடையே பகைமை யுணர்ச்சியையோ வெறுப்புணர்ச்சியையோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ வளர்க்கக் கூடிய" சொற்களாகும்.

மூலாதார விதியோடு கூடிய 4-வது விளக்கம் கூறுவதாவது:—

"மன்னர் பிரானின் குடிமக்களாகிய பல்வேறுபட்ட வகுப்பினரிடையே பகையுணர்ச்சியையோ வெறுப்புணர்ச்சியையோ வளர்க்கின்ற அல்லது வளர்க்குந் தன்மைவாய்ந்த விஷயங்களைக் குறிப்பிடுகின்ற சொற்கள், கெட்ட எண்ணத்தோடன்றி அத்தகைய விஷயங்கள் அகற்றப்படவேண்டுமென்ற நன்னோக்கத்தோடு உபயோகப்படுத்தப்பட்டிருந்தால், அத்தகைய சொற்கள் இவ்வுட்பிரிவின் (யெச்) விதியில் விவரிக்கப் பெற்றுள்ளனவற்றைப்போன்ற சொற்களாகக் கருதப்படமாட்டா."

இத்தகைய மனுவொன்று போடப்பட்டிருப்பதை யொட்டி நீதிமன்றமானது கட்டுரையின் தனித்தனியான அரைகுறைப் பகுதிகளிலோ சொற்றொடர்களிலோ சொற்கோர்வைகளிலோ முழுக்கவனத்தையும் செலுத்தாது கட்டுரை முழுவதையும் நேர்மையான முறையில் விருப்பு-வெறுப்பின்றி நடுநிலைமையில் நின்று படித்துத் தெளிந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமென்பது வெளிப்படை. அப்பத்திரிகையைப் படிக்கக்கூடியவர்களுக்கு மேற்படி முழுக் கட்டுரையும் விளைவிக்கும் பொதுவான தன்மை எதுவாக இருக்கக்கூடுமென்பதை நீதிமன்றம் யோசித்துத் தீர்மானித்தல் வேண்டும். வார்த்தைகள் ஜோடனையும் — புனைந்துரையும் — மிகைபடக் கூறலும் — வேகத்தைக் கிளப்பக்கூடிய எழுத்து வீச்சும் கவனிக்கப் பெறவேண்டியவையே; ஆனாலும்கூட, அவற்றைக் கொண்டு மட்டுமே கட்டுரையொன்று யாதொரு சட்டத்தின் வரையறைக்குள் வந்துவிடுகிறதென சொல்லிவிடுதல் முடியாது.

சர்க்கார் உத்தரவின் அனுபந்தத்தில் மேலே குறிப்பிட்ட இரு தேதிகளில் வெளியான இரண்டு கட்டுரைகளிலிருந்து இருபகுதிகள் தரப்பட்டுள்ளன; முதல் பகுதி: "காந்திராமசாமியும்—பெரியார் ராமசாமியும்" என்று தலைப்பிடப்பெற்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அது ஓரளவு நீண்ட கட்டுரையேயாகும்; ஆனால் சர்க்கார் உத்தரவு அனுபந்தத்தில் கட்டுரையின் சிற்சில பகுதிகளே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. முழுக்கட்டுரையின் போக்கையும் நாங்கள் கண்டோம்; சர்க்கார் சார்பில் வாதிக்க ஆஜராயிருக்கும் அட்வகேட் ஜெனரல்கூட அனுபந்தப் பகுதிகளைமட்டுமே வைத்து வாதாடவில்லை. இக்கட்டுரை எழுந்ததின் நோக்கம் என்னவென்பது தெற்றெனத் தெரிகிறது. 1948-ம் ஆண்டு ஏப்ரலில் சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தேர்ந்தெடுக்கப்பெற்றதையொட்டியதே இக்கட்டுரை. அத்தேர்தலில் எதிர்த்து நின்ற அபேட்சகர் டி. பிரகாசம் ஆவார். ராமசாமி ரெட்டியாரின் நற்பண்பியல்புகளுக்குப் புகழுரை புகன்று, கட்டுரை ஆரம்பமாகிறது. "அத்தகைய ஒரு மனிதருக்கு எதிர்ப்பு இருப்பானேன்?"

என்று மேற்கொண்டு ஒரு கேள்வியைப் போடுகிறது கட்டுரை. ராமசாமி ரெட்டியாரை எதிர்த்து நின்றவர் பிறிதொரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவரல்லரென்பதையும் அவர் கட்சிக்காரரே அவரை எதிர்த்து நின்ருரென்பதையும் கட்டுரையாளர் குறிப்பிட்டு எழுதுகிருர். 'அவர் பொருத்தமானவரல்லலர்; அவரது கொள்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று' என்பதாக எதிர்த்து நிற்பவர்சார்பில் காரணங்கூறப்பெற்றிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்கப்போவதில்லை. கட்டுரையாளர் கூறும் முறையிலேயே அக்கட்டுரைப் பகுதியின் உட்கருத்தைக்காண்போம்:—

> "நாடாளும் கட்சியிலே நல்லவர் என்று நாட்டு மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு தலைவருக்கு, காரணமின்றி — வெளியே பகிரங்கமாகக் காரணம் ஏதும் கூறப்படாத நிலையில்—போட்டி ஏற்பட்டிருக்கிறது. அவருடைய குணம் சந்தேகிக்கப்படவில்லை. அவருடைய திட்டம் தாக்கப்படவில்லை, மாற்றுத் திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை. என்ருலும், அவருக்குப்போட்டி—போட்டியா! அது ஏன்?"

கட்டுரையின் ஏனையபகுதி அன்றைய நடப்புகளையும் நிகழ்ச்சிகளையும் பற்றிய விளக்கமாகும். சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலுள்ள சுயநல பிராமணக் கும்பலொன்றின் தந்திர சூழ்ச்சிகளும் "ஜாதிப்பித்துமே" இவ்வெதிர்ப்புக்குக் காரணமென்பதை எடுத்துக்காட்டு முகத்தான் அவ்விளக்கம் தரப்பட்டுள்ளது. ராமசாமி ரெட்டியார் வெற்றிபெற்ருரென்று அறிவிக்கப்பட்டவுடனடியாக நேரிட்டதாகக் கூறப்படும் நிகழ்ச்சியொன்றைப்பற்றி கட்டுரையாளர் குறிப்பிடுகிருர். வெளியில் கூடியிருந்த மக்கள், தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் "பிராமணர் (பார்ப்பனர்) ஒழிக" என முழக்கமிட்டனராம். இப்போட்டிக்குக் காரணமே பிராமணர்கள் தானென்பதை மக்கள் நன்கு உணர்ந்திருந்தார்களாகையால் தான், தேர்தல் முடிவு தெரிந்ததும் முழக்கமிடலாயினரென்று கட்டுரையாளர் கூறுகிருர்; மக்கள் நினைத்ததும் சரியென்பதே அவர் கருத்து. பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்னையை

முன் வைத்தே அப்போட்டி நிகழ்ந்ததென்றும் தெளிவுறுத்துகிறார். ஓமந்தூர் ரெட்டியார் கட்சியிலேயே ஒரு தனிக்கூட்டம் இருக்கிறதென்றும், ஒருவர் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் அக்கூட்டத்துக்குக் கவலையில்லையென்றும் பிராமணர் ஆதிக்கத்துக்குஆதரவுதராத எத்தகையவரையும்பதவியிலிருந்து இறக்கி தங்களுக்குப் பயன்படக்கூடிய ஒருவரையே அவ்விடத்தில் அமர்த்துவது என்ற எண்ணம் படைத்தது அக்கூட்டம் என்றும் கட்டுரையாளர் கருதுகிறார். கட்டுரையின் முடிவில் "திராவிட ராமசாமி"யைப்பற்றிக் குறிப்பிடப்படுகிறது. "திராவிட ராமசாமி" என்றது ஈ. வெ. ராமசாமி நாயக்கரைத்தான். கட்டுரையாளர் கூறுகிறார்:—

> "ஒரே கூட்டத்துக்குள் இருந்துகொண்டு, ஒரே கொடி, ஒரே கட்சி என்று சொந்தம் பேசிக்கொண்டு இருந்தாலும், தமிழகக் காந்தி என்று தக்கோர் புகழ்ந்தாலும், சுயநலக் கூட்டத்தாரின் சூழ்ச்சியும் வியன் பகை வகுப்புவாத வெறியும், தாக்கியபடிதான் இருக்குமென்றால், காங்கிரஸ் ராமசாமியாக இருப்பவர் எந்த விதத்திலே திராவிட ராமசாமியைவிட அதிக மேலான நிலையில் இருக்கிறார் என்று கேட்கிறோம்."

பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற வேறுபாடு கருதாது அனைவருமே இந்தியத்தாயின் சேய்கள் என்பதாகக்கூறி பெருமகிழ்வும் பெருமிதமும் கொண்டு நின்ற ராமசாமி ரெட்டியார் போன்ற ஒருவருக்கு எதிர்ப்பு இருப்பதா என்று மனம் நைந்து வருந்துகிறார் கட்டுரையாளர்.

சட்டசபை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ இல்லையோ, பிராமண சமூகத்தைச் சேர்ந்தோர் அனைவரும் கட்டுரையில் கடிந்துரைக்கப்பட்டுள்ளனரென்பதாக அட்வகேட் ஜெனரல் தனது விவாதத்தில் குறிப்பிட்டுள்ளார். கட்டுரை முழுவதையும் படித்துப் பார்த்த எங்கட்கு இவ்விவாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. சட்ட

சபைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிராமண உறுப்பினர்கள் பிராமண சமூகத்தின் பிரதிநிதிகளேயாவரென்று அட்வகேட் ஜெனரல் வலியுறுத்த முயலுகிருர். இது உண்மைக்கு மாருனதாகும். இவ்விவாதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. பிராமணர்களுக்கெனத் தனித் தொகுதி கிடையாது; அதுவன்றியும், எந்த சமூகத்தினுடையவும் பிரதிநிதிகளாக எவ்வபேட்சகர்களையும் காங்கிரஸ் கட்சி தேர்தலுக்கு நிறுத்தவில்லை. காங்கிரஸ் லட்சியக் கோட்பாடுகளைக் கொண்டோரென்ற பொதுவான திட்டத்தின் மீதே சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதைக்கொண்டே அவர்கள் சட்டசபையில் அக்குறிப்பிட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாக அமர்ந்திருக்கிருர்களெனக்கூற முற்படுவது சரியானதல்ல. சிற்சில சமயங்களில் பிராமண வகுப்பைச்சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள் சமுதாய சம்பந்தமான பிரச்னைகள் சில பலவற்றில் பிராமண சமூகத்தைச் சேர்ந்த பெருவாரி மக்களுக்கு மாருன கருத்துக்கள் கொண்டு திகழ்வதைசாதாரணமாகக் காண்கிருேம். அக்கட்டுரையில் பிராமண வகுப்பைத் தாக்கியிருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. ராமசாமி ரெட்டியாரைத் தலைமைப் பதவியினின்றும் கவிழ்த்தே தீருவதெனத் திட்டமிட்டு காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒரு கூட்டம் வந்ததாக அடுத்தடுத்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டுரையில் கட்டுரையாளரின் கருத்துப்படி இக்கூட்டத்தில் பிராமணர்களே அடங்கியிருந்தாலும் இருக்கலாம். ஆனல் இது கொண்டே அக்கட்டுரை நேரடியாகவோ. மறைமுகமாகவோ பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கு மிடையே பகைமையையும் வெறுப்பையும் வளர்த்துவிடுமெனக் கூறுதற்கியலாது.

இரண்டாவது கட்டுரை முதற் கட்டுரையை விட சற்று நீண்டதேயாகும். ஆனல் சர்க்கார் உத்தரவோடு கூடிய அனுபந்தத்தில் கடைசி சில பாராக்களே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. வகுப்புவாதம் பற்றி விளக்கம் தந்துரைப்பதாக அமைந்திருக்கிறது அக்கட்டுரை. கட்டுரையின் பெரும்பகுதி, குறிப்பாக அதன் முற்பகுதி எவ்வகையிலும் தீதிழைப்பதாக இல்லையென்று அட்வகேட் ஜெனரலே நேரிய முறையில்

கூறியுள்ளார். கட்டுரையின் போக்கையுணர்த்த ஒரு சில பகுதிகளே போதுமானது.

"நாம் நாற்பது கோடி மக்கள்—ஆனால் நாலாயிரம் ஜாதிகளாகப் பிரிந்து பிளவுபட்டுப் பாழானோம். உன் ஜாதி பெரிது, என் ஜாதி உயர்ந்தது, நீ மட்டம். நீ தாழ்ந்த ஜாதி என்று நமக்குள் சண்டையிட்டு நாசமானோம். இதைச் சாதகமாக்கிக் கொண்டான் அன்னியன். பாழான சாதி பேதம் இந்த நாட்டில் இருக்கும் வரையில் நாடு உருப்படாது. வீணான ஜாதி பேதத்தாலே தான் நம் நாடு, வெள்ளைக்காரனிடம் இவ்வளவு காலம் அடிமைப்பட்டுக் கிடந்தது. தமிழர்கள் ஜாதி பேதத்தை அடியோடு விட்டொழிக்க வேண்டும். ஒன்றே குலம்—ஒருவனே தேவனும். நமக்குள் ஒற்றுமைவேண்டும். வகுப்புவாதம்கூடாது"

பின்னர், கட்டுரையாளர் சமூக நீதிக்காக போராட்டம் பற்றிப் பேசப் புகுந்து,'வகுப்புவாதி' என்ற சொல்வகுப்பு நீதிக்காகப் பாடு படுவோரைத் தூற்றும் வகையிலேயே உபயோகிக்கப்படுகிறதெனக் கூறுகிறார். ஹிந்து சமுதாயத்தில் பெரு வாரியான மக்கள் பிராமணரல்லாதாரேயென்றும், பிராமணர் சிறு பான்மையினரேயென்றும் குறிப்பிட்டு, ஆனால் அப்பெருவாரி மக்களேஷிசிறுபான்மையானவரை உயர் ஜாதிக்காரர்களாக நினைந்தொழுகி வருகிறார்களென்றும் கட்டுரையாளர் நடப்பை எடுத்துக் காட்டுகிறார். சாஸ்திர சம்பிரதாய பழக்க வழக்கங்களை யொட்டியே இந்நிலை நீடித்து வருகிறதென்றும் இதன் காரணமாகவே பெருவாரியான மக்கள் கல்வி—தொழில்—பொருளியல்—அரசியல்—மதஇயல் இன்ன பிற துறைகளில் உரிய அளவு வாய்ப்பு வசதிகள் கிடைக்கப் பெருதவராய் நிற்க, சிறுபான்மை வகுப்பினராகிய பிராமணர்கள் அனைத்து துறைகளில் பெருத்த அளவுக்கு முன்னேற்றங் கண்டுள்ளனரெனக் கட்டுரையாளர் மேலும் கூறுகிறார். சமூக நீதிக் கோரிக்கையை முற்ற விட்டால் தங்கள் ஆதிக்கத்துக்கு ஆபத்து வந்துகிட்டுமென்றுணர்ந்த பிராமணர்கள் நீதி

வேண்டி நின்றோரை ''வகுப்பு வாதிகள்'' என்று கூறலாயினர். கட்டுரையாளர் இவ்விதம் குறிப்பிட்டு, அக்கருத்துக்கு அரணாக ''தினசரி'', ''விடுதலை'' போன்ற பத்திரிகைகளினின்றும் மேற்கோள் பகுதிகளை எடுத்துக் காட்டி விளக்குகிறார். கடந்த பல ஆயிரம் ஆண்டாண்டுகளாகப் பரவி, ஊன்றி, பெருவாரி மக்கள் கூட்டத்தினரை ''பிறவி அடிமைகளா''கவும் ''நடைப் பிணங்களா''கவும் ஆக்கி விட்ட இம்முறை அடியோடு அழிக்கப் பெற வேண்டுமெனக் கட்டுரையாளர் அடுத்து வலியுறுத்துகிறார். இங்கு தான் அவர் ''பார்ப்பனீயம்'' (''பிராமணிஸம்'') என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். தானும் தன் கருத்து, கொண்ட பிறரும் பிராமணர்கள் மீது வெறுப்பு கொண்டோரல்லரென்றும், பிராமணீய முறையினையே தாங்கள் எதிர்ப்பதாகவும் கட்டுரையாளர் திட்ட வட்டமாகக் கூறுகிறார். பிராமணீயத்தினால் விளையும் தீமைகளை எடுத்துக் காட்ட வன்மொழிகளே பிரயோகப் படுத்தப்படுகின்றன, உதாரணமாக சில பகுதிகள்;—

> ''பார்ப்பனீயத்தின் பலனாக, ஒரு பெரிய திராவிட சமுதாயம் சின்னாபின்னப்பட்டுப் போய்க் கிடக்கிறது. பிறர்க்கு அடிமைகளாக, பேசும் ஊமைகளாக. நடைப் பிணமாகப் போய்விட்டது. தடித்த தோலராகி விட்டது. தகப்பனுக்கு மேக வியாதி இருப்பின் பிறக்கும் குழந்தை குருடாகும் என்பர் மருத்துவ நூல் கற்றோர். குருட்டுக் குழவிக்கு குவலயத்தின் குதூகலக் காட்சி எங்ஙனம் தெரியும்? அதுபோல் தான் திராவிடச் சமுதாயம் பார்ப்பனீயம் எனும் மேக நோயால் பீடிக்கப்பட்டு இருக்கிறது. பிறக்கும் திராவிடன் குருடனாகிறான்.''

கட்டுரையின் கடைசிப் பகுதி இம்முறையை அழித்தொழிப்பதற்கான மார்க்கங்களைக் கூறுகிறது. பெருவாரி மக்கள் கூட்டத்தாரிடையே ஒற்றுமை, கட்டுப்பாடு, வீரவுணர்ச்சி, தன்மானம் ஏற்பட்டால்தான் இம்முறையினை ஒழிக்கமுடியும். அறிவுத் தெளிவுடனிருக்கும் எவரும் பார்ப்பனீயத்தைக்காரணங்காட்டி

ஆதரிக்க முன்வரமாட்டார்களெனக் கட்டுரையாளர் தந்துரைக்கிருர்.' 'பார்ப்பனீயம் பிரித்தானியம்போலவேஒழிக்கவேண்டிய முறையாகும்'' ஆதிக்கக்காரர்கள் வசைபாடுவார்களேயென்று நாம் அஞ்சத் தேவையில்லையெனக்கட்டுரையாளர் இறுதியாகக் குறிப்பிட்டிருக்கிருர்., மகாத்மாஜீயின்சாக்காட்டைக் குறிப்பிட்டு கட்டுரையாளர் கூறுவதாவது:—

> உத்தமர் உண்மைக்காக உயிரைத் தந்தபோது நாம் சாதாரண புகழை, பதவியை, இழந்தால்தான் என்ன? நஷ்டம் அல்ல நாட்டுக்கு! விமோசனம் கிடைக்கும்.

இத்தகைய மனுவொன்றின்மீது தீர்ப்பு வழங்கப்போகும் கோர்ட்டாருக்கு கட்டுரையாளர் மேற்படி கட்டுரையில் தந்துள்ள கருத்துரைகள் ஏற்புடைத்தவை தாமா என்பது குறித்துக் கவலையில்லை. தகராறுக்குரிய அனைத்து விஷயங்களிலும் இருவேறுபட்ட வாதங்கள் எழுதுவது இயல்பு. கட்டுரையாளர் தனது கருத்துக்களுக்கு அரணுகத் தருங்காரணங்கள் பொருத்தமானவையா அல்லவா என்பது குறித்துப் பரிசீலனை செய்யும் வேலை நீதி மன்றத்துக்கு இல்லை. பல்வேறுபட்ட சமூகத்தாரிடையே நேரிடையாகவோ மறைமுகமாகவோ பகைமையுணர்ச்சியும் வெறுப்புணர்ச்சியும் வளர்க்கும் வகையில் கட்டுரையில் எதுவும் காணப்படுகிறதா வென்பதைக் கண்டறிவதே இப்போதைய ஒரே பிரச்னையாகும். பார்ப்பனீயம் (பிராமணிஸம்) என்ற சொல்லுக்குப் பதிலாக ''ஜாதி முறை'' என்ற தொடரை கட்டுரையாளர் பிரயோகித்திருப்பாரேயாளுல், ஷை கட்டுரை மேலே கூறப்பட்ட சட்ட 4 (1) (யெச்) பிரிவின் எல்லைக்குள் வரப்போவதில்லையென அட்வகேட் ஜெனரலே ஒப்புக்கொள்ளுகிருர். அம்முறையைப் பார்ப்பனீயம் என்று குறிப்பிடுவதாலேயே சட்டம் அங்கு குறுக்கிடுகிறது என்கிருர் அட்வகேட்—ஜெனரல். சந்தேகத்துக்கு இடம் வைக்காமல், கட்டுரையாளர் பெருவாரியான பிராமணர்களென்றும் பெரும்பான்மையரான பிராமணரல்லாதாரென்றும் இருவகுப்பாகப் பிரித்துக் கூறுகிருர். கட்டுரை ஆரம்பத்தில் பல்வேறு

ஜாதிகள்பற்றிக் குறிப்பிடுகிருரெனினும், இறுதியில் ஒரே குலத் தவராய் அனைவரும் திகழ்தல் வேண்டுமென்பதை வலியுறுத்து கிருர், பிராமணர்களை ஒரு பக்கமும், இதர ஜாதியார்களை மற் ருெரு பக்கமும் வைத்தே பேசப்படுகிறது. கட்டுரை முழுவ தையும் படித்துப் பார்த்ததில் எங்களுக்குத் தோன்றுவது என்னவெனில் சமுதாயத்தில் பிராமணர்கள் உயர்நிலை அடைவ தற்கு ஆதரவாயிருந்த முறையினை, அது ஜாதி முறை என் றழைக்கப்பட்டாலுஞ் சரி, பிராமணீயம் என்றழைக்கப்பட்டா லுஞ் சரி, அந்த முறையினையே கட்டுரையாளர் காய்கிருர். இக்காலத்திய பிராமணர்கள்தான் இதைத்தான் செய்து விட் டார்களென்பதாகக் கட்டுரையில் எங்கும் குறிப்புக் காணப்பட வில்லை. "கடந்த ஆயிரமாயிர மாண்டுகளில்" இம்முறையானது பரவி வேருன்றி விட்டதென்பதே கட்டுரையாளரின் புகா ராகும். பிராமணர்கள் மீது தனிப்பட்ட முறையில் தனக்கு எவ்வித வெறுப்பும் இல்லை என்பதைக் கட்டுரையாளர் தெளி வாகக் குறிப்பிட்டிருப்பதோடு, ஒழிக்கப் பெறவேண்டியது அந்த முறைதானென்பதைத் திட்டமாகக் கட்டுரையின் பல இடங்களில் கூறியுள்ளார். பிராமணர்கள் மீது பிராமணரல்லா தார் பகைமையுணர்ச்சியோடு நடந்துகொள்ள வெண்டு மென்றே அல்லது வெறுப்பு காட்ட வேண்டுமென்றே தூண்டிவிடும் போக்கு கட்டுரையின் எப்பகுதியிலும் காணப் படவில்லை. ஆர்க்குமெண்டின்போது எங்களுள் ஒருவர் குறிப் பிட்டது போல, கட்டுரையாளரின் கருத்துப்படி அம்முறையை ஒழிப்பதற்கான ஒரேவழி, பெரும்பான்மை மக்கள் சமூகத்தார் தங்களது தாழ்வு மனப்பான்மையை விட்டொழித்து ஒற்றுமை, ஒழுங்கு, தன்மதிப்புடன் நடந்துகொள்ளப் பழகுவதேயாகும். மேலே நாங்கள் எடுத்துக்காட்டியிருக்கும் கட்டுரைப் பகுதி யைத் தவிர்த்து வேறு எந்தப் பகுதியிலும் அதிகப்படி யாகவோ கடுமையாகவோ வார்த்தைப் பிரயோகம் கிடையாது.

யாதொரு வகுப்பு அல்லது ஜாதியின் துயரங்களை எடுத் துரைக்கப் புகும் கட்டுரையாளரொருவர், இவ்விஷயத்தில் நேர்மையற்ற முறையில் நடந்துகொள்வதாகக் கருதப்படும் வகுப்பு அல்லது ஜாதியை சிறிது கடுமையாகவே தாக்குதற்கு

வாய்ப்பு இருக்கவே செய்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட வகுப்பு அல்லது ஜாதியொன்றின் துயரங்களை எடுத்துக்கூறும் கட்டுரையை ஷை சட்ட எல்லைக்குள் கொண்டு வருவது தவறாகும்.


சிறு பான்மை வகுப்பொன்று பெருவாரி மக்கள் கூட்டமொன்றை அடிமைப்படுத்தி ஆதிக்கஞ் செலுத்த துணைபுரிவதாகக் கட்டுரையாளரால் கருதப்படும் அம்முறையானது மிக மிக வன்மையாகத் தாக்கப்பட்டுள்ளது கட்டுரையில் என்று நாம் கொண்டாலுங்கூட, சிறுபான்மை வகுப்பினராகிய பிராமணர்மீது நாம் தாக்குதல் எதுவும் காணவில்லை. எவர்மீதும் வெறுப்பையோ அதிருப்தியையோ தூண்டிவிடக் கூடியதான சொற்களெதுவும் இருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. இதுபோன்ற வழக்கு 4-வது விளக்கத்தின் கீழ் வருமென்பதே எங்கள் கருத்து. பிராமணர்கள் உபாதையுறும் வகையில் பிராமணரல்லாதவரை அவர்கள்மீது ஏவிவிடுவதான எந்தத்தன்மையும் கட்டுரையில் இல்லையென்பதை அட்வகேட்-ஜெனரலே ஏற்றுக்கொண்டுள்ளார்.

பகைமை, வெறுப்பு என்பவை கடுமையான சொற்களாகும். மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவி வரும் உலகில், அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதும் துயரங்களை எடுத்துக் கூறுவதும் பகைமையையும் வெறுப்பையும் வளர்க்கக்கூடியவைகளாகுமென்று கூறுவது நியாயமற்றதாகும். ஒரு வகுப்பு மக்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கென காரண காரியங்களை எடுத்துக்கூறி ஆவன செய்வது பல திறப்பட்ட வகுப்பாரிடையே வெறுப்பையும், பகைமையையும் வளர்ப்பதாகாது. கட்டுரையில் ஆங்காங்கு சிற்சில சொற்றொடர்களும் சொற்கோவைகளும் சிறிது வேகமாகவே இருக்கின்றனவென்பது உண்மையே. "பார்ப்பனீயம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பது நல்லதல்லதான். ஆனால், பத்திரிகைச் சட்டத்தின் பாதுகாப்பு விதிகள் தண்டனை விதிப்பது பற்றி பேசக்கூடியனவாய் இருப்பதால், ஐயப்பாடு நேரிடுவதை யனுசரித்து அளிக்கக்கூடிய சலுகையை (அப்படி எதுவுமிருப்பின்) யார்

மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதோ அவர் பக்கமே எப்போதும் அளிக்க வேண்டியதாயிருக்கிறது. ஐயப்பாடு எதுவும் நேரிடும் பட்சத்திலும், அதனாலாகிய சலுகையை மனுதாரரே பெறவகைசெய்யும் வழக்காகும் இது.

வேறு வழக்குகளின் தீர்ப்புகள் சில எங்கள் முன்பு எடுத்துக்காட்டப்பட்டன; ஆனால் தகராறுக்குரிய அக்குறிப்பிட்ட கட்டுரைகளின் வாசக அமைப்பையொட்டியே நாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டியிருப்பதால் அவற்றைப்பற்றி விவாதிக்கப் புகுவதால் பயன் எதுவும் ஏற்படுமென்று நாங்கள் கருதவில்லை.

இந்தியப் பத்திரிகை (அவசரச்) சட்ட 4 (1) (யெச்) பிரிவின்கீழ் விவரிக்கப்படுவதையொத்த தன்மை வாய்ந்த சொற்கள் மேற்படி கட்டுரைகளில் இல்லையென நாங்கள் கருதுவதால் மனுதாரர் ரூ 3000 ஜாமீன் தொகை கட்டவேண்டுமென்று பணிக்கப்பட்ட மாகாண சர்க்கார் உத்தரவை தள்ளுபடி செய்கிறோம்.



7603a



# 'ரதி'யின்
## தித்திக்கும் தேனடை ஏடு

| | | | |
|---|---|---|---|
| காதலுக்கு மருந்து — கோமதிஸ்வாமிநாதன் (ஹாஸ்ய நாடகம்) | 1 | 8 | 0 |
| கோகில பவனத்துக் கொலை—டிடெக்டிவ் | 1 | 0 | 0 |
| வீரபாண்டிய கட்டபொம்மன் (சரித்திர நாடகம்)—சா. சண்முகவேலு | 1 | 4 | 0 |
| ஆசை ரோஜா — W. C சுந்தரேசன் | 0 | 12 | 0 |
| கீதா — இளம்பாரதி | 1 | 8 | 0 |
| சிரித்த முகம் — எல்லார்வி | 1 | 4 | 0 |
| அனார்கலி — பி. ஆர். சிவானந்தம் (சரித்திர நாடகம்) | 1 | 0 | 0 |
| அழகு நட்சத்திரங்கள் — நவீனன் | 1 | 0 | 0 |
| வாழப்பிறந்தவள் — அதரதாசன் | 0 | 12 | 0 |
| வெறி — விருதை, ந. இராமசாமி | 0 | 4 | 0 |
| மந்திரி மனைவி — கலைப்பித்தன் | 0 | 4 | 0 |

*விபரங்கட்கு :*

**ரதி பதிப்பகம்**

தெற்கு ஆவணி,

மதுரை.

*Jacket Printed at Vinodan Press, Madras-1.*